بسم الله الرحمن الرحيم

# சுவனப் பாதை

ஈருலக வெற்றியின் வழிகாட்டி

வெளியீடு: இஸ்லாமிய அழைப்பகம், ஜித்தா (ஸனாய்யியா) இதழ்: 2:2, துல்கஃதா, 1426, பக்கங்கள்-12

P.O.Box-32628, Jeddah-21438, e-mail : suvanam@gmail.com

## தியாகத்தின் மறுபெயர் ஹஜ்

-மௌலவி. இப்ராஹீம் மதனி.M.A

ஹஜ் கடமை இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றாகும், அல்லாஹுத்தஆலா நபி(ஸல்) அவர்கள் மூலமாக தன் அடியார்களுக்கு ஹஜ்ஜைக் கடமையாக்கினான். நபி(ஸல்) அவர்கள் தன் உம்மத்தினருக்கு ஹஜ்ஜைக் கடமையாக்கினாலும் இதன் பின்னணியில் நபி இபராஹீம்(அலை) அவர்களும், அவர்களின் குடும்பமும் செய்த மாபெரும் தியாகங்கள் மறைந்திருக்கின்றன. அவர்கள் செய்த பல தியாகங்கள் இன்று நமக்கு ஹஜ்ஜின் கடமையான வணக்கமாக்கப்பட்டிருக்கின்றன. கஃபா, ஜம்ஜம் கிணறு, ஸஃபா மர்வா மலை, ஜம்ராக்களில் கல்லெறிதல், குர்பானி கொடுத்தல் இவைகள் அனைத்தும் இக்குடும்பம் செய்த

### உள்ளே...

வெற்றி யாருக்கு? - 4

அல்-அக்ஸா (பின்னணி) - 6

எய்ட்ஸ் நோயைப் பற்றி - 9

யானை (அறிவியல் தொடர்) - 11

குறுக்கெழுத்துப் போட்டி - 12

தியாகத்தை ஞாபகப்படுத்துகின்றன. கஃபாவை தவாஃப் செய்யாமல், ஸஃபா, மர்வா மலைகளுக்கு இடையில் தொங்கோட்டம் ஓடாமல் யாராவது ஹஜ், உம்ரா செய்ய முடியுமா? வருடத்தில் ஒரு முறை மாத்திரம் அல்ல. ஒவ்வொரு நாளும் இத்தியாகத்தை மக்கள் ஞாபகப்படுத்திக் கொண்டுதான் இருக்கின்றார்கள்.

**இப்ராஹீம்(அலை) அவர்கள் செய்த தியாகங்களும் ஹஜ் கடமைகளும்**

**ஜம்ஜம் கிணறும், ஸஃபா மர்வா மலையும்**

அல்லாஹ் திருமறையில் இவ்வாறு கூறுகின்றான்:

**✪"எங்கள் இறைவனே! நிச்சயமாக நான் என் சந்ததியரிலிருந்தும், சங்கையான உன் வீட்டின் (கஃபாவின்) அருகே, விவசாயமில்லாத (இப்)பள்ளத்தாக்கில், எங்கள் இறைவனே- தொழுகையை அவர்கள் நிலை நிறுத்தாட்டுவதற்காகக் குடியேற்றியிருக்கின்றேன். எனவே மக்களில் ஒரு தொகையினரின் இதயங்களை அவர்கள்பால் சாய்ந்திடச் செய்வாயாக! இன்னும் அவர்கள் நன்றி செலுத்தும் பொருட்டு கனிவர்க்கங்களிலிருந்து அவர்களுக்கு நீ ஆகாரமும் அளிப்பாயாக!" (14:37)**

மனிதர்களின் வாடையையே உணர முடியாத நேரத்தில் மனித வர்க்கங்களின் ஒரு கூட்டத்தாரை அங்கு கொண்டு

*-தொடர்ச்சி அடுத்த பக்கம்....*

## அன்றைய கேள்விக்கு இன்றைய பதில்

- ஸாலிஹ். குலசை

இஸ்லாமிய மார்க்கம் இந்த பூவுலகிற்கு இறைவன் அருளிய வரப்பிரசாதம். அது சத்தியத்தை விரும்பக்கூடிய எல்லா உள்ளங்களுக்கும் சாந்தியை பகரக்கூடிய சன்மார்க்கம்.

தன் வாழ்க்கையில் நடக்கக்கூடிய சில சம்பவங்கள் அச்சமயத்தில் இல்லையென்றாலும் நீண்ட நாட்களுக்கு பிறகு எப்போதாவது அவனுடைய மனதில் பெரும் மாற்றத்தை உண்டாக்கக்கூடிய சக்தியாக, திருப்புமுனையாக அது மாறிவிடுகின்றது. ஒருநேரம் இல்லையென்றாலும் இன்னுமொரு நேரம், அவன் மனத்திரையில் அந்த சம்பவம் ஓடும்பொழுது அதன் ஆழத்தையும், அது ஏற்படுத்திய தாக்கத்தையும் உள்மனதில் உணர்ந்தவர்கள் அதிலிருந்து விடுதலை பெறத் துடிப்பார்கள். குறைந்தபட்சம் அதற்குரிய வழியையாவது தேடுவார்கள். அதை உணராதவர்களுக்கு வேண்டுமானால் அது ஒரு கனவாக நின்றுவிடும்.

மனிதன் சிந்தித்து சுய உணர்வு பெற்று தன் மீதுள்ள கடமையையும், இறைவனின் வல்லமையையும் இறைவனுக்கு செய்ய வேண்டிய கடமையையும் உணர்ந்து இந்த பூமியில் சுயமரியாதை மிக்கவனாக நம் கண்முன்னே இந்த பூமியில் கொட்டி வைத்திருக்கும் அல்லாஹ்வின் அத்தாட்சிகளுக்கு சாட்சி பகரவேண்டும் என்பதற்காகத் தான் அல்லாஹ் மனிதனுக்கு அறிவைக் கொடுத்தான். ஆனால், அந்த மனிதனோ இறைவனின் பெயராலேயே அதே அறிவைக்கொண்டு தன்னுடன் வாழும் சகமனிதனை இழிவுபடுத்துகின்றான் அல்லது இழிவாகக் கருதுகின்றான்.

நான் ஒன்பதாவது படித்துக்கொண்டிருக்கும் பொழுது, தீண்டாமையிலிருந்தும், மூடநம்பிக்கையிலிருந்தும் சிந்திக்கத்தூண்டிய ஒருசில சம்பவங்களை அல்லாஹ்விற்காக உங்களோடு பகிர்ந்து கொள்வதில் சந்தோஷமடைகின்றேன்.

**சிந்திக்கத் தூண்டிய சம்பவம்**

நான் பழனிமலை முருகன் கோவிலுக்கு ஐந்து முறை நடந்தும் இரண்டு முறை பேருந்திலும் ஆக ஏழு முறை சென்றிருக்கின்றேன். நான் கடைசி முறையாக முருகன் கோவிலுக்கு மாலை போட்டு இருக்கும்பொழுது ஒன்பதாம் வகுப்பின் கடைசி தேர்வு வந்ததால் நடந்து செல்பவர்களோடு என்னால் போக இயலவில்லை. அதனால் என்னைப் பேருந்தில் வரச்சொன்னார்கள். பிறகு நாங்கள் நடைபயணம் செல்லக்கூடியவர்களை எங்கள் ஊரிலிருந்து ஒவ்வொரு வருடமும் பயணம் அனுப்புவோம். இது வழக்கமாகும்.

எங்கள் ஊரில் உள்ள பெரியகோவில் ஒன்றில் பயணமனுப்பும் சடங்கு நடந்தது. பழனி மலைக்கு செல்லக்கூடிய குழுவில் கீழ்ஜாதி, மேல்ஜாதி மக்கள் என அனைவரும் இருப்பார்கள். பயணம் செல்லக்கூடிய எல்லா

*-தொடர்ச்சி 8-ஆம் பக்கம்....*

வரும்படியும், புற்பூண்டுகளே முளைக்க முடியாத பாலைவனப்பூமியிலே பழவகைகளைக் கொண்டு அம்மக்களுக்கு உணவளிக்கும் படியும் நபி இப்ராஹீம்(அலை) அவர்கள் பிரார்த்தனை செய்தது அவர்கள் அல்லாஹுவின் மீது வைத்திருந்த அசைக்க முடியாத நம்பிக்கையை பறைசாற்றுகின்றது. அப்பிரார்த்தனையை அல்லாஹ் ஏற்றுக் கொண்ட காரணத்தினால்தான் இன்று எங்கும் கூடாத அளவுக்கு மக்காவில் கூடும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. அதே போல் உலகத்தில் உள்ள எல்லாப் பழவகைகளையும் மக்காவில் வருடமெல்லாம் பெறமுடிகின்றது.

அல்லாஹுவின் கட்டளைக்கு இணங்க, நீண்ட இடைவெளிக்குப் பின் கிடைத்த தன் மழலைக் குழந்தையையும் மனைவியையும் அழைத்துக் கொண்டு மனித சஞ்சாரமற்ற புற்பூண்டுகள்கூட முளைக்க முடியாத பாலைவனத்தில் (இன்று க.ஃபாவாக இருக்கும் இடத்துக்கு அருகாமையில்) விட்டுவிட்டு கொஞ்சம் பேரீத்தம் பழங்களையும், தண்ணீரையும் அங்கு வைத்து விட்டு நபி இப்ராஹீம்(அலை) அவர்கள் வந்த வழியே திரும்பிச் சென்று விடுகின்றார்கள். எங்களை தன்னந்தனியே விட்டுவிட்டு எங்கே செல்கின்றீர்கள் என ஹாஜரா அம்மையார் அவர்கள் பல முறை கேட்டும் நபி இப்ராஹீம்(அலை) அவர்கள் எந்த விடையும் கொடுக்காத போது அல்லாஹ்வா உங்களை இவ்வாறு செய்யும்படி ஏவினான்? என ஹாஜரா அம்மையார் அவர்கள் மீண்டும் தன் கணவர் இப்ராஹீம்(அலை) அவர்களிடம் கேட்டார்கள். ஆம்! என்று அவர்கள் விடை கூறவே, அப்படியானால் அல்லாஹ் எங்களை கைவிடமாட்டான் என்று கூறியவாறு தன் குழந்தையோடு அங்கேயே தன்னந்தனியாக அமர்ந்து விடுகின்றார்கள். நபி இப்ராஹீம்(அலை) தன் குடும்பத்தைப் பார்க்க முடியாத அளவுக்குத் தூரமாகச் சென்று ஒரு மேட்டுப் பகுதியில் கிப்லாவை முன்னோக்கி நின்று மேற்கூறிய பிரார்த்தனையை செய்து விட்டு சென்று விட்டார்கள். இருந்த தண்ணீர் முடிந்ததும் தனக்கும் தன் பிள்ளைக்கும் தாகம் ஏற்படவே தண்ணீர் தேடி அலைகின்றார்கள் அன்னை ஹாஜரா அவர்கள், அப்போது அவர்களுக்கு பக்கமாக இருந்த மலை, ஸ.ஃபா மலைதான், யாரையாவது அந்தப்பகுதியில் பார்க்கலாமா என்று நினைத்து ஸ.ஃபா மலைமீது ஏறுகின்றார்கள், அங்கு யாரையும் காணவில்லை. அங்கிருந்து கீழே இறங்கி மர்வா மலைக்குச் செல்கின்றார்கள். அங்கு செல்லும் வழியில்தான் ஒரு ஓடையைக் கண்டார்கள். அந்த ஓடையைக் கடப்பதற்காக தன் ஆடையைச் சிறிது உயர்த்திய வண்ணம் வேகமாக அந்த ஓடையைக் கடந்தார்கள். இன்று அந்த இடத்தை சுட்டிக்காட்டுவதற்காக பச்சை நிற மின்விளக்கு பொருத்தப்பட்டிருக்கின்றது. அவ்விடத்தில் ஸ.ஃயீ செய்யும் ஆண்கள் மாத்திரம் சிறிது வேகமாக ஓடுவது சுன்னத்தாக்கப்பட்டிருக்கின்றது. மர்வா மலையை அடைந்த போது அதன்மீது ஏறி மனிதர்களில் யாராவது இருப்பார்களா எனப்பார்த்தார்கள். அங்கேயும் யாரையும் காணவில்லை, இப்படி ஏழு முறை செய்தார்கள். கடைசியாக மர்வா மலையில் நிற்கும் போதுதான் தண்ணீர் சத்தத்தைக் கேட்டார்கள். தண்ணிர் சத்தம் எங்கிருந்து வருகின்றது என்பதை உற்றுநோக்கினார்கள். இப்போது ஜம்ஜம் தண்ணீர் கிணறு இருக்கும் இடத்தில் ஜிப்ரயீல்(அலை) அவர்கள் தன் இறக்கையால் தோண்டி அங்கே தண்ணீர் வெளியாகிக் கொண்டிருக்கின்றது. அங்கே ஓடோடி வந்து தண்ணீர் வெளியில் செல்லாமல் தன் கையால் கட்டினார்கள். அதிலிருந்து தன் பாத்திரத்திலும் தண்ணீரை எடுத்து ஊற்றினார்கள். தண்ணீரை எடுத்து ஊற்றும் போதெல்லாம் தண்ணீர் ஊற்றெடுக்க ஆரம்பித்தது. நபி(ஸல்) அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ்(ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இஸ்மாயீலின் தாய்க்கு அல்லாஹ் அருள் புரிவானாக! ஜம்ஜம் தண்ணீரை கட்டாமல் விட்டிருந்தால் அல்லது தன் பாத்திரத்தில் அள்ளி ஊற்றாமல் இருந்திருந்தால் ஜம்ஜம் தண்ணீர் ஊற்றெடுத்து ஓடும் ஒன்றாக ஆகியிருக்கும் எனக்கூறினார்கள். தண்ணீர் தேடி வந்த “ஜுர்ஹும்” கோத்திரத்தார் ஹாஜரா அம்மையார் அவர்களிடம் உத்தரவு பெற்று அங்கே குடிபெயர்ந்தார்கள். அல்லாஹ் இப்ராஹீம்(அலை) அவர்களின் துஆவை ஏற்று ஜம்ஜம் கிணறை அன்றிலிருந்து இன்றுவரை வற்றாத கிணறாக ஆக்கியிருக்கின்றான்.

**அல்லாஹ் ஒன்றை ஏவி விட்டால் ஏன் எதற்கு என்று கேட்காமல் உடன் அந்தக் கட்டளைக்கு கீழ் படிய வேண்டும். இதை இப்ராஹீம்(அலை) அவர்கள் முழுமையாக செயல்படுத்திக் காட்டினார்கள். இந்தத் தியாகத்தை ஞாபகம் செய்யும் முகமாகவே ஹாஜிகளும் ஹஜ்ஜு செய்யாதவர்களும் ஹஜ்ஜுப் பெருநாளன்று ஆடு மாடு ஒட்டகங்களை குர்பானி கொடுக்கின்றார்கள்.**

### கஃபா

அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

**✪ இப்ராஹீமும், இஸ்மாயீலும் இவ்வீட்டின் அடித்தளத்தை உயர்த்திய போது, “எங்கள் இறைவனே! எங்களிடமிருந்து (இப்பணியை) ஏற்றுக் கொள்வாயாக நிச்சயமாக நீயே (யாவற்றையும்) கேட்பவனாகவும் அறிபவனாகவும் இருக்கின்றாய்” (என்று கூறினார்) (2:127)**

இந்த வசனத்தில் அல்லாஹ் இப்ராஹீம்(அலை) மற்றும் இஸ்மாயீல்(அலை) அவர்கள் க.ஃபாவை கட்டிய செய்தியைக் கூறுகின்றான். மேலே கூறப்பட்ட இரு வசனங்களின் மூலம் இப்ராஹீம்(அலை) அவர்களின் குடும்பமாகிய இம்மூவரும் செய்த இத்தியாகத்தின் வெளிப்பாடாகவே க.ஃபா, ஜம்ஜம் கிணறு மற்றும் ஸ.ஃபா மர்வா என்னும் மாபெரும் நினைவுச் சின்னங்கள் உருவாகியிருக்கின்றன. இவைகளை நினைவு கூறாமல் ஹஜ், உம்ரா கடமையை எந்த ஒரு ஹாஜியாவது நிறைவு செய்ய முடியுமா? இது அவர்கள் செய்த தியாகங்களின் பிரதிபலனாகும்.

### மகாமு இப்ராஹீம்

அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்

**✪(இதையும் எண்ணிப் பாருங்கள் “க.ஃபா என்னும்) வீட்டை நாம் மக்கள் ஒதுங்கும் இடமாகவும் இன்னும், பாதுகாப்பான இடமாகவும் ஆக்கினோம் இப்ராஹீம் நின்ற இடத்தை - மகாமு இப்ராஹீமை - தொழும் இடமாக நீங்கள் ஆக்கிக்கொள்ளுங்கள்” (என்றும் நாம் சொன்னோம்). இன்னும் “என் வீட்டைச் சுற்றி வருபவர்கள், தங்கியிருப்பவர்கள், ருகூ.ஃ செய்பவர்கள், ஸுஜூது செய்பவர்கள் ஆகியோருக்காகத் தூய்மையாக அதனை வைத்திருக்க வேண்டும்” என்று இப்ராஹீமிடமிருந்தும்,**

**இஸ்மாயீலிடமிருந்தும் நாம் உறுதிமொழி வாங்கினோம்.**

***(அல்குர்ஆன்2:125)***

இப்ராஹீம்(அலை) அவர்கள் க.்.பாவை எந்தக் கல் மீது நின்று கட்டினார்களோ அதனையே அல்லாஹ் இங்கு குறிப்பிடுகின்றான். அதைத் தொழும் இடமாக எடுத்துக் கொள்ளுங்கள் என அல்லாஹ் நமக்குக் கட்டளையிட்டிருக்கின்றான். எந்த ஒரு ஹாஜியோ அல்லது உம்ராச் செய்பவரோ அல்லது தவா.்.ப் செய்பவரோ அவர்களின் தவா.்.பை முடித்த பின் மகாமு இப்ராஹீமுக்குப் பின் (தவா.்.புக்காக) இரண்டு ரக்அத்துத் தொழுவது சுன்னத்தாக்கப் பட்டிருக்கின்றது. இவ்வாறு ஹஜ்ஜில் செய்யும் பெரும்பகுதியான வணக்கங்கள் அவர்களின் தியாகங்களை ஒவ்வொரு வருடமும் நமக்கு ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கின்றன. இன்னும் அல்லாஹ் அவ்விருவரையும் க.்.பாவை தவா.்.ப் செய்ய வருபவர்களுக்கும், இ.்.திகாப் இருப்பவர்களுக்கும் தொழுபவர்களுக்கும் சகல அசுத்தங்களிலிலுருந்தும் சுத்தப் படுத்தும்படியும் உறுதிமொழி வாங்கினான்.

## குர்பானியும் ஜம்ராக்களும்

அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்

**✪எனவே, நாம் அவருக்கு பொறுமைசாலியான ஒரு மகனைக் கொண்டு நன்மாராயங் கூறினோம். பின் (அம்மகன்) அவருடன் நடமாடக்கூடிய (வயதை அடைந்த) போது அவர் கூறினார் “என்னருமை மகனே! நான் உன்னை அறுத்துப் பலியிடுவதாக நிச்சயமாகக் கனவு கண்டேன். இதைப்பற்றி உம் கருத்து என்ன என்பதைச் சிந்திப்பீராக!” (மகன்) கூறினார் “என்னருமைத் தந்தையே! நீங்கள் ஏவப்பட்டபடியே செய்யுங்கள். அல்லாஹ் நாடினால் - என்னை நீங்கள் பொறுமையாளர்களில் நின்றுமுள்ளவராகவே காண்பீர்கள்.” ஆகவே, அவ்விருவரும் (இறைவன் கட்டளைக்கு) முற்றிலும் வழிப்பட்டு, (இப்ராஹீம்) மகனைப் பலியிட முகம் குப்புறக்கிடத்திய போது நாம் அவரை “யா இப்றாஹீம்!” என்றழைத்தோம். “திடமாக நீர் (கண்ட) கனவை மெய்ப்படுத்தினீர். நிச்சயமாக நன்மை செய்வோருக்கு நாம் இவ்வாறே கூலி கொடுத்திருக்கிறோம்.” “நிச்சயமாக இது தெளிவான ஒரு பெருஞ் சோதனையாகும்.” ஆயினும், நாம் ஒரு மகத்தான பலியைக் கொண்டு அவருக்குப் பகரமாக்கினோம்.**

***(அல்குர்ஆன் 37:101 -107)***

அல்லாஹுத்தஆலா தன் அடியாரான நபி இப்ராஹீம்(அலை) அவர்களுக்கும், அவர்களின் மனைவியையும் மகனையும் மனித நடமாட்டமற்ற இடத்தில் விட்டுவிடும்படி சோதனை செய்து முடித்ததும் அதை விடப்பெரும் சோதனையைக் கொண்டு சோதிக்க ஆரம்பித்தான். அதாவது தன் மகன் இஸ்மாயீல்(அலை) அவர்கள் ஓடி விளையாடும் வயதிலே அவர்களை அறுக்கும்படி இப்ராஹீம்(அலை) அவர்கள் ஒரு கனவு கண்டார்கள். (நபிமார்கள் காணும் கனவும் வஹியின் ஒரு வகைதான்) அல்லாஹ்வின் கட்டளையை நிறைவேற்றுவதற்காக ஒரு கையில் கத்தியையும் மறு கையில் தன் மகனையும் பிடித்துக் கொண்டு இப்ராஹீம்(அலை) அவர்கள் சென்றார்கள். அல்லாஹ்வின் கட்டளையை நிறைவேற்ற முடியாமல் மகனின் பாசம் தன்னைத் தடுத்து விடுமோ என்ற அச்சத்தில் இஸ்மாயீல்(அலை) அவர்களை முகம் குப்புறக் கிடத்தி அறுப்பதற்கு முயலுகின்றார்கள். தன் அடியார் இப்ராஹீம்(அலை) அவர்கள் தனது இந்தக் கட்டளையையும் நிறைவேற்றுவதற்கு முன் வந்தபோது அறுப்பதை அல்லாஹ் தடுத்து விடுகின்றான். அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் **“இப்ராஹீமே!” என்றழைத்தோம்.“திடமாக நீர் (கண்ட) கனவை மெய்ப்படுத்தினீர். நிச்சயமாக நன்மை செய்வோருக்கு நாம் இவ்வாறே கூலி கொடுத்திருக்கிறோம். “நிச்சயமாக இது தெளிவான ஒரு பெருஞ் சோதனையாகும்.**

அல்லாஹ் இதை ஒரு பெரும் சோதனை என்றும் கூறுகின்றான். இஸ்மாயீல்(அலை) அவர்களுக்குப் பகரமாக சுவர்க்கத்திலிருந்து ஒரு ஆட்டையும் இறக்கிக் கொடுக்கின்றான். அதை இப்ராஹீம்(அலை) அவர்கள் அறுத்தார்கள். அல்லாஹ்வின் கட்டளைக்கு முற்றாகக் கட்டுப்பட்டார்கள். இதுதான் தியாகம், அல்லாஹ் ஒன்றை ஏவி விட்டால் ஏன் எதற்கு என்று கேட்காமல் உடன் அந்தக் கட்டளைக்கு கீழ் படிய வேண்டும். இதை இப்ராஹீம்(அலை) அவர்கள் முழுமையாக செயல்படுத்திக் காட்டினார்கள். இந்தத் தியாகத்தை ஞாபகம் செய்யும் விதமாக ஹாஜிகளும், ஹஜ்ஜு செய்யாதவர்களும் ஹஜ்ஜுப் பெருநாளன்று ஆடு, மாடு, ஒட்டகங்களை குர்பானி கொடுக்கின்றார்கள். இதனால்தான் ஹஜ்ஜுப் பெருநாளை “தியாகப் பெருநாள்” என்று அழைப்பார்கள்.

ஒவ்வொரு முஸ்லிமும் தன் வாழ்நாளில் இவ்வாறுதான் அல்லாஹ்வின் கட்டளைக்கு மதிப்பளிக் வேண்டும். அல்லாஹ்வின் சில கட்டளைகளை நிறைவேற்றும் போது நமக்கோ அல்லது நமது குடும்பத்துக்கோ அல்லது நமது பொருளுக்கோ அழிவு வந்துவிடும் என ஷைத்தான் நமது உள்ளங்களில் தீய எண்ணங்களைப் போடலாம். அந்த எண்ணங்களை நாம் ஏற்றுக் கொள்ளக் கூடாது. ஒரு போதும் தன் கட்டளைகளை நிறைவேற்றுபவர்களை அல்லாஹ் இழிவாக்க மாட்டான் என்பது நபி இப்ராஹீம்(அலை) அவர்களும் அவர்களின் குடும்பமும் செய்த தியாகங்களினால் நமக்குக் கிடைக்கும் பெரும் பாடமாகும். ஆகவே அல்லாஹ்வின் அனைத்துக் கட்டளைகளுக்கும் மதிப்பளிப்போமாக.


***ஹஜ் பற்றிய விளக்கங்களுக்கு...***

உங்களுடைய ஹஜ் பற்றிய சந்தேகங்களையும், விளக்கங்களையும் கீழ்கண்ட தொலைபேசிகளைத் தொடர்பு கொண்டு பயனடையுங்கள்.

**மௌலவி. இப்ராஹிம் மதனி**

(அழைப்பாளர் - ஸனாய்யியா)

050 6625229

**மௌலவி. ஸியாத் மக்கீ**

(அழைப்பாளர் - ஸனாய்யியா)

050 3569454

# வெற்றி யாருக்கு?

- நெல்லை. இப்னு கலாம் ரசூல்

குர்ஆன் ஹதீஸைப் பின்பற்றி நடக்ககூடிய மக்கள் வெகு சொற்பமே. அப்படி இருப்பவர்களும் கூட குர்ஆனை நன்றாக ஓதத் தெரிந்தவராகவோ குர்ஆனின் மொழிபெயர்ப்பை ஒருமுறையேனும் முழுமையாக படித்தவராகவோ, ஏராளமான ஹதீஸ்களின் மொழிபெயர்ப்பின் தொகுப்புகளைக் கற்றறிந்தவராகவோ கிடைப்பதென்பது மிகமிக அரிது. இந்நிலையில் வெற்றி என்று நாம் குறிப்பிடும் இலக்கை எப்படி அடைவது? அதற்குறிய பதிலை படைத்த வல்லோன் பாங்குடன் கூறுவதைப் பாருங்கள்,

**ஈமான் கொண்டவர்கள் நிச்சயமாக வெற்றி பெற்று விட்டனர். அவர்கள் எத்தகையோரென்றால், தங்கள் தொழுகையில் உள்ளச்சத்தோடு இருப்பார்கள். இன்னும், அவர்கள் வீணான (பேச்சு, செயல் ஆகிய)வற்றை விட்டு விலகியிருப்பார்கள், ஜகாத்தையும் தவறாது கொடுத்து வருவார்கள். மேலும், அவர்கள் தங்களுடைய வெட்கத் தலங்களைக் காத்துக் கொள்வார்கள். ஆனால், அவர்கள் தங்கள் மனைவிகளிடமோ அல்லது தங்கள் வலக்கரம் சொந்தமாக்கிக் கொண்டவர்களிடமோ தவிர - (இவர்களிடம் உறவு கொள்வது கொண்டும்) நிச்சயமாக அவர்கள் பழிக்கப்படமாட்டார்கள். ஆனால், இதற்கு அப்பால் (வேறு வழிகளை) எவர் நாடுகிறாரோ அ(த்தகைய)வர்கள் தாம் வரம்பு மீறியவர்களாவார்கள். இன்னும், அவர்கள் தங்கள் (இடம் ஒப்படைக்கப்பட்ட) அமானிதப் பொருட்களையும், தங்கள் வாக்குறுதிகளையும் காப்பாற்றுவார்கள். மேலும் அவர்கள் தம் தொழுகைகளை(க் குறித்த காலத்தில் முறையோடு) பேணுவார்கள். இத்தகையோர் தாம் (சுவர்க்கத்தின்) வாரிசுதாரர்கள். இவர்கள் ஃபிர்தவ்ஸ் (என்னும் சுவனபதியை) அனந்தரங் கொண்டு அதில் இவர்கள் என்றென்றும் தங்கியிருப்பார்கள்.**

***(அல்குர்ஆன் 23:1- 11)***

ஒருவர் சுவனவாசியாவதற்கு அல்லாஹ் கூறக்கூடிய தகுதிகளை மேற்கூறிய அருள்மறை வசனங்கள் நமக்குத் தெளிவுபடுத்துகின்றன. மற்றொரு வசனத்தில் அல்லாஹ் கூறுவது. **ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தைச் சுவைக்கக் கூடியதாகும். அன்றியும்- இறுதித் தீர்ப்பு நாளில் தான், உங்க(ள் செய்கைக)ளுக்குரிய பிரதி பலன்கள் முழுமையாகக் கொடுக்கப்படும். எனவே எவர் (நரக) நெருப்பிலிருந்து பாதுகாக்கப்பட்டுச் சுவர்க்கத்தில் பிரவேசிக்குமாறு செய்யப்படுகிறாரோ. அவர் நிச்சயமாக வெற்றியடைந்து விட்டார். இவ்வுலக வாழ்க்கை மயக்கத்தை அளிக்கவல்ல (அற்ப இன்பப்) பொருளேயன்றி வேறில்லை. *(அல்குர்ஆன் 3:185)***

மறுமை வாழ்வின் சிறப்பை நரகநெருப்பிலிருந்து பாதுகாப்பு பெற்று சுவனத்தைப் பெறுவது நிச்சயமாக வெற்றியே என்ற அர்த்தம் பொதிந்த அருள்மறை வசனங்களின் ஆதாரத்தைப் பார்த்தோம். இனி சுவனத்தில் நுழையக்கூடியவர்கள் யார்? என்பதை நபிமொழி ஒளியில் காண்போம்.

அபூதர் அல் கிஃபாரீ(ரலி) அறிவிக்கிறார்கள். நான் (இரவு நேரத்தில்) நபி (ஸல்) அவர்களுடன் மதீனாவின் (பாறைகள் நிறைந்த) ஹர்ராப் பகுதியில் நடந்து சென்று கொண்டிருந்தபோது உஹத் மலை எங்களை எதிர்கொண்டது. அப்போது நபி(ஸல்) அவர்கள் "அபூ தர்ரே!" என்று அழைத்தார்கள். நான் "இதோ! காத்திருக்கிறேன் கூறுங்கள் இறைத்தூதர் அவர்களே!" என்றேன். நபி(ஸல்) அவர்கள் "இந்த உஹத் மலை அளவுக்கு என்னிடம் தங்கம் இருந்து, அதிலிருந்து ஒரேயொரு பொற்காசு என்னிடம் (எஞ்சி) இருந்தாலும் அதை அல்லாஹ்வின் அடியார்களிடையே இப்படி இப்படியெல்லாம் செலவிடாமல் மூன்று இரவுகள் கழிந்து செல்வதுகூட எனக்கு மகிழ்ச்சியளிக்காது. கடனை அடைப்பதற்காக நான் எடுத்துவைக்கும் சில பொற்காசுகளைத் தவிர!" என்று கூறி, தம் வலப்பக்கமும் இடப்பக்கமும் பின் பக்கமும் சைகை செய்தார்கள்.

பிறகு (சிறிது தூரம்) நடந்துவிட்டு (இம்மையில் செல்வம்) அதிகம் உள்ளவர்களே மறுமை நாளில் (நற்பலன்) குறைந்தவர்கள் ஆவர். இப்படி இப்படியெல்லாம் (இறைவழியில் தம் செல்வத்தைச்) செலவிட்டவர்களைத் தவிர" என்று கூறி, தம் வலப்பக்கமும் இடப்பக்கமும் பின்பக்கமும் சைகை செய்தார்கள். (ஆனால்,) இத்தகையவர்கள் சொற்பமானவர்களே என்றும் கூறினார்கள். பிறகு நபி(ஸல்) அவர்கள் என்னிடம் "நான் வரும்வரை இந்த இடத்திலேயே இருங்கள்" என்று கூறிவிட்டு, இரவு இருளில் நடந்து சென்று மறைந்து விட்டார்கள். அப்போது உரத்த குரல் ஒன்றை நான் கேட்டு நபி(ஸல்) அவர்களை யாரோ ஏதோ செய்து விட்டார்கள் என்று அஞ்சினேன். அவர்களிடம் செல்லலாம் என்று நினைத்தேன். (ஆனால்,) என்னிடம் நபி(ஸல்) அவர்கள் "நான் வரும்வரை இங்கேயே இருங்கள்" என்று சொன்னது என் நினைவுக்கு வந்தது. எனவே, அவர்கள் என்னிடம் வரும் வரை அங்கேயே இருந்தேன். (அவர்கள் வந்ததும்) இறைத்தூதர் அவர்களே! ஏதோ ஒரு குரலைக் கேட்டு நான் பயந்து விட்டேன் என்று கூறி, (நான் நினைத்தது பற்றியும்) அவர்களிடம் எடுத்துச் சொன்னேன்.

அப்போது நபி(ஸல்) அவர்கள் "அதை நீங்கள் செவியுற்றீர்களா?" என்று கேட்டார்கள். நான் "ஆம்" என்றேன். அது (வானவர்) ஜிப்ரீல் தாம். அவர் என்னிடம் வந்து "உங்கள் சமுதாயத்தாரில் (ஏக இறைவனாம்) அல்லாஹ்வுக்கு எதனையும் இணைவைக்காமல் (வாழ்ந்து) மரணமடைகிறவர் சொர்க்கம் புகுவார்" என்றார். நான் (ஜிப்ரீலிடம்) "அவர் விபச்சாரம் புரிந்தாலும், திருடினாலுமா (சொர்க்கம் புகுவார்)?" என்று கேட்டேன். அவர் "(ஆம்) விபச்சாரம் புரிந்தாலும் திருடினாலும் சரியே (சொர்க்கம் புகுவார்)" என்று பதிலளித்தார் என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள். ***(ஆதாரம் : புகாரி).***

அல்லாஹ்வுக்கு இணைவைக்காத மக்கள் திருட்டு, விபச்சார குற்றங்கள் புரிந்திருந்தாலும் சுவனம் செல்வதை இந்த ஹதீஸ் கூறுகிறது.

அல்லாஹுக்கு இணைவைக்காத நிலையில் வாழ்ந்து மரணித்தோர் திருட்டு, விபச்சார குற்றங்கள் புரிந்து இருந்தாலும் சுவர்க்கத்தில் நுழைவர் என்பதைக் கண்டோம். ஆகவே இணைவைக்காது உறுதியுடன் வாழ்ந்தவர் குற்றங்கள் எதுவும் புரிந்தால் மறுமையில் அவரின் நிலை எப்படியிருக்கும்? ஏகத்துவத்தை ஏற்றுக்கொண்டவர் எந்த தவறைப் புரிந்தாலும் சுவனத்திற்குத்தான் செல்லப் போகிறாரே பின் அவரின் அமல்களின் வரையறை என்ன? இப்படி நம் சிந்தனைகளில் எழும் கேள்விகளுக்கு என்ன தான் பதில்?

நபிமொழிகள் சில நம் சந்தேகங்களுக்கு விடையளிக்கின்றன, அவற்றைக் காண்போம்.

ஒருவர், தன் சகோதரனுக்கு அவனுடைய மானத்திலோ, வேறு (பணம், சொத்து போன்ற) விஷயத்திலோ, இழைத்த அநீதி (ஏதும் பரிகாரம் காணப்படாமல்) இருக்குமாயின், அவர் அவனிடமிருந்து அதற்கு இன்றே மன்னிப்புப் பெறட்டும். தீனாரோ, திர்ஹமோ (பொற்காசுகளோ வெள்ளிக் காசுகளோ) பயன் தரும் வாய்ப்பில்லாத நிலை (ஏற்படும் மறுமை நாள்) வருவதற்கு முன்னால் (மன்னிப்புப் பெறட்டும்.) (ஏனெனில், மறுமை நாளில்) அவரிடம் நற்செயல் ஏதும் இருக்குமாயின் அவனுடைய அநீதியின் அளவுக்கு அவரிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டு (அநீதிக்குள்ளானவரின் கணக்கில் வரவு வைக்கப்பட்டு) விடும். அநீதியிழைத்தவரிடம் நற்செயல்கள் எதுவும் இல்லையென்றால் அவரின் தோழரின் (அநீதிக்குள்ளானவரின்) தீய செயல்கள் (அவர் கணக்கிலிருந்து) எடுக்கப்பட்டு அநீதியிழைத்தவரின் மீது சுமத்தப்பட்டு விடும் என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா(ரலி) அறிவித்தார்கள்.

***(ஆதாரம் : புகாரி)***

மற்றொரு நபிமொழி ஏகத்துவத்தை ஏற்றுக்கொண்டவர்களும் தாங்கள் இழைத்த தீய செயல்களுக்காக தண்டனை பெற்று பின் தூயோன் அல்லாஹ்வின் அருங்கருணையால் நரகிலிருந்து சுவனம் திரும்புவதை விளக்குகிறது. இறைநம்பிக்கையாளர்கள் நரகத்தி(ன் பாலத்தி)லிருந்து தப்பி வரும்போது சுவர்க்கத்திற்கும், நரகத்திற்கும் இடையிலுள்ள ஒரு பாலத்தில் தடுத்து நிறுத்தப்படுவார்கள். அங்கு உலகில் (வாழ்ந்த போது) அவர்களுக்கிடையே நடந்த அநீதிகளுக்காகச் சிலரிடமிருந்து சிலர் கணக்குத் தீர்த்துக் கொள்வார்கள். இறுதியில் அவர்கள் (மாசு) நீங்கித் தூய்மையாகிவிடும்போது சுவர்க்கத்தில் நுழைய அவர்களுக்கு அனுமதி வழங்கப்படும். முஹம்மதின் உயிர் எவன் கையிலுள்ளதோ அவன் மீதாணையாக! அவர்கள் சுவர்க்கத்தில் உள்ள தம் வசிப்பிடத்தை, உலகத்திலிருந்த அவர்களின் இல்லத்தைவிட எளிதாக அடையாளம் கண்டுகொள்வார்கள் என அபூஸயீத் அல்குத்ரீ (ரலி) அவர்கள் அறிவித்தார்கள்.

(அறிவிப்பாளர்களில் ஒருவரான) யஸீத் இப்னு ஸுரைஉ(ரஹ்) அவர்கள் (இவ்வுலகில் ஒருவரின் மீது ஒருவர் கொண்டிருந்த) குரோதத்தை அவர்களின் இதயங்களிலிருந்து அகற்றிவிடுவோம்" எனும் (திருக்குர்ஆன் 7:43வது) வசனத்தை ஓதிவிட்டு, (அதற்கு விளக்கமாக) இந்த ஹதீஸை அறிவித்தார்கள். ***(ஆதாரம் : புகாரி)***

மற்றொரு அறிவிப்பில் மறுமை நாளில் விசாரணை முடிந்த பின்) சுவர்க்கவாசிகள், சுவர்க்கத்திலும், நரகவாசிகள் நரகத்திலும் நுழைந்துவிட்ட பின் அல்லாஹ் எவருடைய உள்ளத்தில் கடுகளவு ஈமான் எனும் இறைநம்பிக்கை உள்ளதோ அவரை (நரகத்திலிருந்து) வெளியேற்றிவிடுங்கள் என்று கூறுவான். உடனே அவர்கள் கருகிய நிலையில் வெளியேறுவார்கள். அப்போது அவர்கள் கரிக் கட்டைகளாகக் காட்சியளிப்பார்கள். பின்னர் அவர்கள் **நஹ்ருல் ஹயாத்** எனும் (ஜீவ) நதியில் போடப்படுவார்கள். உடனே அவர்கள் சேற்று வெள்ளத்தில் அல்லது வெள்ளத்தின் கருப்புக் களி மண்ணில் விதை முளைப்பதைப் போன்று (புதுப் பொலிவுடன்) நிறம் மாறி விடுவார்கள். அந்த வித்து (விலிருந்து வரும் புற்பூண்டுகள்) மஞ்சள் நிறத்தில் (பார்ப்பதற்கு அழகாகவும், காற்றில்) அசைந்தாடியதாக(வும்) முளைப்பதை நீங்கள் கண்டதில்லையா? என அபூ ஸயீத் அல்குத்ரீ(ரலி) அறிவித்தார்கள். ***(ஆதாரம் : புகாரி)***

**அல்லாஹ் எவருடைய உள்ளத்தில் கடுகளவு ஈமான் எனும் இறைநம்பிக்கை உள்ளதோ அவரை (நரகத்திலிருந்து) வெளியேற்றிவிடுங்கள் என்று கூறுவான். உடனே அவர்கள் கருகிய நிலையில் வெளியேறுவார்கள். அப்போது அவர்கள் கரிக் கட்டைகளாகக் காட்சியளிப்பார்கள். பின்னர் அவர்கள் நஹ்ருல் ஹயாத் எனும் (ஜீவ) நதியில் போடப்படுவார்கள்.**

ஈமான் கொண்டோர் **இணைவைக்காமல் வாழ்ந்தவர்கள்** மறுமையில் சுவர்க்கத்தை அல்லது செய்த பாவங்களுக்கு தண்டனை அனுபவித்த பின்பு சுவர்க்கத்திற்குத் திரும்புவதை மேற்கூறிய நபிமொழிகள் நமக்குணர்த்தின. இறைமறுப்பாளர்கள், இணைவைப்பாளர்கள் நிலை மறுமையில் எப்படி இருக்கும் என்பதை கீழ்காணும் நபிமொழி தெளிவாக்குகிறது.

அனஸ் இப்னு மாலிக்(ரலி) அறிவிக்கிறார்கள், மறுமை நாளில் இறை மறுப்பாளன் (விசாரணைக்காகக்) கொண்டுவரப்பட்டு உனக்கு பூமி நிரம்பத் தங்கம் சொந்தமாக இருந்தால் நீ அவற்றைப் பிணைத் தொகையாகத் தர(வும் அதன் மூலம் நரக வேதனையிலிருந்து விடுதலை பெறவும்) நீ முன்வருவாய் அல்லவா? என்று அவனிடம் கேட்கப்படும். அதற்கு அவன் "ஆம்" என்று பதிலளிப்பான். அப்போது இதைவிட சுலபமான ஒன்றே (அல்லாஹ்வுக்கு இணை கற்பிக்காமலிருப்பதையே) உன்னிடம் கோரப்பட்டிருந்தது (ஆனால், அதை நீ ஏற்கவில்லை) என்று கூறப்படும் என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

***(ஆதாரம் : புகாரி)***

மற்றொரு அறிவிப்பில் வரும் வாசகம் பின் வருமாறு உள்ளது. மறுமை நாளில் நரகவாசிகளிலேயே மிக இலேசான வேதனை அளிக்கப்படுபவரிடம் பூமியிலிருக்கும் பொருள்களெல்லாம் உனக்கே சொந்தம் என்றிருந்தால் நீ அவற்றை பிணைத் தொகையாகத் தர(வும் அதன் மூலம் இந்த வேதனையிலிருந்து விடுதலை பெறவும்) நீ முன்வருவாய் அல்லவா? என்று அல்லாஹ் கேட்பான். அதற்கு அவர் "ஆம்" என்று பதிலளிப்பார். அப்போது அல்லாஹ் நீ (மனிதர்களின் தந்தை) ஆதமின் முதுகந்தண்டில் (அணுவாக) இருந்தபோது இதைவிட இலேசான ஒன்றை எனக்கு எதையும் இணை கற்பிக்கலாகாது என்பதைத்தான் உன்னிடமிருந்து எதிர்பார்த்தேன். ஆனால் (பூமிக்கு உன்னை அனுப்பியபோது) எனக்கு இணை கற்பிப்பதைத் தவிர வேறெதற்கும் நீ ஒப்புக் கொள்ளவில்லையே! என்று அல்லாஹ் கூறுவான்.

***(ஆதாரம் : புகாரி)***

மொத்தத்தில் மறுமையில் பெறும் வெற்றி என்பது நரகத்திற்குச் செல்லாமல் சுவர்க்கத்திற்குச் செல்வதுதான். மேற்கூறிய நபிமொழிகள் சுவர்க்கத்திற்குச் செல்வோர், நரகத்திற்குச் செல்வோர், நரகத்திற்குச்சென்று சுவர்க்கத்தில் நுழைவோர் பற்றிய விளக்கங்களே உள்ளன. இருப்பினும் நரகத்திற்குச் செல்லாமல் சுவர்க்கத்திற்குச் செல்லும் உபாயத்தை உணர்த்தும் நபிமொழியை ***(இன்ஷா அல்லாஹ்) அடுத்த இதழில் பார்ப்போம்...***

# பாலஸ்தீன் "அல்-அக்ஸா" மசூதியின் பின்னணி

**(பாலஸ்தீனம் பிரச்சினை சம்பந்தமான யூத, கிருஸ்துவ, முஸ்லிமல்லாத ஒருவரின் ஆய்வு) - சுவனப்பாதை வாசகர்களுக்காக இங்கு பிரசுரிக்கிறோம்**.

விரிவாக அலசி ஆராயவேண்டிய விஷயம் அல் அக்ஸா மசூதி. அதனை மீட்பதற்காக பாலஸ்தீனியர்கள் தொடங்கிய "அல் அக்ஸா இண்டி∴பதா" வைப் பார்ப்பதற்கு முன்னால், அம்மசூதியின் பின்னணியைத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

பாலஸ்தீன்-இஸ்ரேல் பிரச்சனையின் ஆணிவேர், இந்த இடத்தில்தான் இருக்கிறது. சற்று நெருங்கிப் பாருங்கள். பற்றி எரியும் இந்த நெருப்பின் வெப்பம்தான், பாலஸ்தீனை ஆயிரமாண்டுகளாக வாட்டிக் கொண்டிருக்கிறது.

மஸ்ஜித் அல் அக்ஸா ஜெருசலேம் நகரில் உள்ள மிகப்பெரிய பள்ளிவாசல் இது. ஒட்டுமொத்த பாலஸ்தீனிலேயே, இதனைக்காட்டிலும் பெரிய பள்ளிவாசல் வேறு ஏதும் கிடையாது. ஒரே சமயத்தில், ஐயாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இங்கே அமர்ந்து தொழ முடியும். முகம்மது நபியின் பாதம் பட்ட பூமி இதுவென்பது, முஸ்லிம்களின் நம்பிக்கை. அவரது விண்ணேற்றத்துடன் தொடர்புடைய நிலம் இது.




இந்த அல்-அக்ஸா பள்ளிவாசலுக்குச் சற்றுத்தள்ளி, இன்னொரு பள்ளிவாசல் இருக்கிறது. அதன் பெயர் மஸ்ஜித்-ஏ-உமர். கலீ∴பா உமர் கட்டிய பள்ளிவாசல் இது.

இந்த அல்-அக்ஸா மற்றும் மஸ்ஜித-ஏ-உமர் ஆகிய இரு பள்ளிவாசல்களையும் இணைத்த வளாகத்தை, முஸ்லிம்கள் "பைத்துல் முகத்தஸ்" என்று அழைப்பார்கள்.

இந்த இடத்தை முன்வைத்துத்தான், யூதர்களுக்கும் அரேபியர்களுக்குமான பிரச்சினை ஆரம்பித்தது.

அல்-அக்ஸா பள்ளிவாசல் இருக்கும் இடத்தில்தான், யூதர்களின் புராதனமான புனிதத்தலமான சாலமன் தேவாலயம் இருந்தது என்பது இஸ்ரேலியர்களின் வாதம். அதற்கு ஆதாரமாக அவர்கள் சுட்டிக்காட்டுவது, அந்தப் பள்ளிவாசலின் ஒருபக்கச் சுற்றுச் சுவராக இன்னமும் மிச்சமிருக்கும் அந்த உடைந்த சுவர். (Wailing wall எனப்படும் அழுகைச் சுவர். சாலமன் ஆலயம் இருந்ததன் அடையாளம், இந்தச் சுவர்தான் என்பது யூதர்களின் கருத்து. இந்தச் சுவரில் முகத்தைப் புதைத்து அழுதபடியே யூதர்கள் பிரார்த்தனை செய்வது வழக்கம்). யூதர்களின் வாதம் என்னவெனில், அல் அக்ஸா பள்ளிவாசலுக்கும், முகம்மது நபி விண்ணேறிய சம்பவத்துக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. அல் அக்ஸாவுக்குச் சற்றுத் தொலைவில் உள்ள Dome of the Rock எனப்படும், மஸ்ஜித்-ஏ-உமர் பள்ளிவாசல் இருந்த இடத்திலிருந்துதான் முகம்மது விண்ணேற்றம் செய்தார் என்பது.

Dome of the Rock தங்களுடைய இக்கருத்தை அழுத்தம் திருத்தமாக உலக மக்கள் மத்தியில் பதியச் செய்வதற்காக, Dome of the Rock - ஐயே அல்-அக்ஸா என்று குறிப்பிடுவது யூதர்களின் வழக்கம். அல்-அக்ஸா மசூதியை இடித்துவிட்டுத் தங்கள் தேவாலயத்தை மீண்டும் அங்கே எழுப்புவதற்குத் தொல்பொருள் துறையின் உதவியை அவர்கள் நாடினார்கள்.

உண்மையில் அல் அக்ஸா வேறு, Dome of the Rock வேறு. இரண்டும் பைத்துல் முகத்தஸ் என்கிற ஒரே வளாகத்தில் இருக்கும், இரு வேறு மசூதிகள்.

அயோத்தி மாதிரியேதான். யூத தேவாலயங்கள் - சாலமன் ஆலயமே ஆனாலும் சரி எப்படியானாலும் மசூதிகளின் காலத்துக்கு முற்பட்டவைதான். ஏனெனில், இஸ்லாத்தின் தோற்றமே காலத்தால் மிகவும் பிற்பட்டது. ஆனால், மசூதி இருக்கும் ஓரிடத்தில்தான் தங்களது புராதன ஆலயம் இருந்தது என்று நிறுவுவதற்கு, அவர்கள் மேற்கொண்ட முயற்சிகள்தான் பல விபரீதங்களை உள்ளடக்கியதாக இருந்தது. ஆதாரங்களில் தெளிவில்லாதது அவற்றுள் முதலானது. அணுகுமுறையில் முரட்டுத்தனம் மிகுந்திருந்தது அடுத்தது. பேசித் தீர்க்க வேண்டிய பிரச்னையை, ராணுவ நடவடிக்கை மூலம் தீர்க்க நினைத்தது மூன்றாவது.

புராண, சரித்திர காலங்கள் தொடங்கி மிகச் சமீபத்தில் 1967-ம் ஆண்டு வரை இந்த மசூதி வளாகம், முஸ்லிம்களின் வசம்தான் இருந்திருக்கிறது. பாலஸ்தீன் யூதர்களை மொத்தமாக விரட்டியடிக்கும் தமது அரசியல் நோக்கத்துக்கு வலு சேர்ப்பதற்காகவே, இஸ்ரேலிய அரசு அல் அக்ஸா மசூதி விஷயத்தைக் கையில் எடுத்து, அங்கேதான் சாலமன் தேவாலயம் இருந்தது என்று தொடர்ந்து பிரசாரம் செய்து, மக்களின் மத உணர்வுகளைத் தூண்டிவிட ஆரம்பித்தது.

பிரச்னையைத் தொல்பொருள் ஆய்வுத்துறையின் வசம் அளித்துவிட்டு, "நீங்கள் எங்கே வேண்டுமானாலும் தோண்டிப் பாருங்கள்" என்று அனுமதியும் அளித்தது.

ஒரு மசூதி இருக்கிறது, மக்கள் அங்கே தினசரி தொழுதுகொண்டிருக்கிறார்கள். உள்ளூர் மக்கள் தவிர உலகெங்கிலுமிருந்து ஜெருசலேத்துக்கு யாத்திரை வரும் முஸ்லிம்கள் அத்தனை பேரும் அந்த மசூதிக்கு வந்து போய்க்கொண்டிருக்கிறார்கள். (முஸ்லிம் உலகின் மூன்றாவது மிக முக்கியமான வழிபாட்டுத்தலம் அது) இறைத்தூதருடன் தொடர்புடைய ஒரு நினைவுத் தலம் அது. அப்படிப்பட்ட இடத்தில் தோண்டிப் பார்க்க அனுமதி அளிப்பது என்றால், என்ன அர்த்தம்?

1967-ம் ஆண்டு யுத்தத்தின்போது ஜெருசலேம் நகரை முழுமையாக யூதர்கள் கைப்பற்றிய பிறகுதான், இதெல்லாம் ஆரம்பமானது. யுத்தத்தில் வெற்றி கண்ட மறுநாளே, இதற்கான பணிகள் தொடங்கிவிட்டன. முதலில் பள்ளிவாசலின் மேற்குப் பகுதியில் பதினான்கு மீட்டர் நீள, ஆழத்துக்குத் தோண்டினார்கள். அடுத்த ஒன்றரை ஆண்டு கால இடைவெளியில், அந்த இடத்தில் சுமார் எண்பது மீட்டர் நீளத்துக்குத் தோண்டி ஓர் அகழி போல் ஆக்கிவிட்டார்கள். பள்ளிவாசலின் மேற்குப் பகுதி வழியே, யாருமே உள்ளே போகமுடியாதவாறு ஆகிவிட்டது.

யுத்தத்தில் அரேபியர்கள் தோற்றிருந்ததால், ஜெருசலேம் நகரில் இருந்த முஸ்லிம்களில் பெரும்பாலானோர்

அப்புறப்படுத்தப்பட்டிருந்தார்கள். ஆகவே, அல் அக்ஸாவில் என்ன நடக்கிறது என்பதே அவர்களுக்குத் தாமதமாகத்தான் தெரியவந்தது. உள்ளம் பதைத்தாலும் ஒன்றும் செய்யமுடியாத நிலையில், அவர்கள் இருந்தார்கள்.

1970-ம் ஆண்டு இந்த அகழ்வாய்வுப் பணியின் இரண்டாம் கட்ட வேலைகள் ஆரம்பமாயின. இம்முறை பள்ளிவாசலின் தென்மேற்கு மூலையிலிருந்து தோண்ட ஆரம்பித்தார்கள். அங்கிருந்து மேற்குத் திசை வாசல் வரை தோண்டிக்கொண்டே போனார்கள். இப்படி அகழ்வாய்ந்தபோது, மிகப் புராதனமான சில கல்லறைகள் கண்டுபிடிக்கப்பட்டன. (அடக்கஸ்தலம் என்பார்கள்.) அவை, முகம்மது நபியின் தோழர்களாக விளங்கிய சிலரின் கல்லறைகள் என்பது, முஸ்லிம்களின் நம்பிக்கை. இதற்கு ஆதாரமாக முஸ்லிம்கள் தரப்பில் சொல்லப்படுவது இதுதான்:

யூதர்களின் அகழ்வாராய்ச்சியில் தட்டுப்பட்ட ஒரு குறிப்பிட்ட கல்லறையில், அது முகம்மது நபியின் தோழர்களுள் ஒருவரான உபாதா இப்னு அல் ஸாமித் என்பவருடையது என்பதற்கான கல்வெட்டு ஆதாரம் இருந்திருக்கிறது! இதே போல இன்னொரு கல்லறையில், ஷத்தாத் இப்னு அவ்ஸ் என்கிற வேறொரு நபித்தோழரின் பெயர் பொறிக்கப்பட்டிருப்பதும், கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

கல்லறைகளைக் கண்டுபிடித்ததோடு, யூதர்கள் நிறுத்தவில்லை. அதையும் உடைத்துப் பார்த்ததில் உள்ளே உடல்களையும் கண்டிருக்கிறார்கள். ஆனால், விஷயம் பெரிதாகிவிடக்கூடாது என்று, அதைச் சொல்லாமல் மறைத்துவிட்டார்கள். தோண்டப்பட்ட அந்த இடங்களில் யாரும் வந்து பார்த்துவிடாமலிருக்க, அந்தப் பகுதியைச் சுற்றிலும், மேலும் பதின்மூன்று மீட்டர் சுற்றளவுக்கு மிகப்பெரிய அகழியைத் தோண்டிவிட்டார்கள்.


Doom of the rock

இந்தச் சம்பவமெல்லாம், எழுபதுகளின் தொடக்கத்தில் நடந்ததாகச் சொல்லப்படுகிறது. துல்லியமான ஆதாரங்கள் ஏதும், அப்போது வெளியாகவில்லை. ஆனால், பள்ளிவாசலின் நுழைவாயிலுக்கு அருகே தோண்ட ஆரம்பித்து, சுமார் பத்து மீட்டர் ஆழத்துக்கு மிகப்பெரிய பள்ளம் உருவானபோது, விஷயம் வெளியே வந்துவிட்டது. இது நடந்தது 1976-ம் ஆண்டில்.

அந்த இடத்தின் அடிவாரம் வரை யூதர்கள் தோண்டிக்கொண்டே போக, எப்படியும் மஸ்ஜித் இடிந்து விழத்தான் போகிறது என்று செய்தி பரவிவிட்டது. துடித்து எழுந்தார்கள், முஸ்லிம்கள். உடனடியாக நடவடிக்கைகளில் இறங்கி, பைத்துல் முகத்தஸ் வளாகமே வக்ஃப் வாரியத்துக்குச் சொந்தமானது அங்கே யூத ஆராய்ச்சியாளர்கள் தோண்டுவது சட்டவிரோதம் என்று ஆதாரங்களைக் காட்டி, படாதபாடுபட்டு ஆய்வை நிறுத்தினார்கள்.

நீதிமன்றத்தில் ஆண்டுக்கணக்கில் வழக்கு இழுத்தடித்தது. வழக்கு ஒருபுறம் நடந்துகொண்டிருக்க, 1981-ம் ஆண்டு யூதர்கள் மீண்டும் பள்ளிவாசலைத் தோண்டத் தொடங்கினார்கள். இம்முறை அவர்களுக்கு, ஒரு சுரங்கப்பாதை அங்கே இருந்தது தெரியவந்தது.

கி.பி. 636-ம் ஆண்டு கலீஃபா உமர் காலத்தில் கட்டப்பட்ட இந்தப் பள்ளிவாசலில், எதற்காக ஒரு சுரங்கப்பாதை அமைக்கப்பட்டிருக்கக்கூடும் என்பதற்கான ஆதாரங்கள் ஏதும் இப்போது இல்லை. ஒரு சாரார் கருத்துப்படி, உமர் இந்தப் பள்ளிவாசலைக் கட்டிய காலத்தில் சுரங்கம் எதையும் அமைக்கவில்லை. மாறாக, கி.பி 690 - 691 ஆண்டுக் காலகட்டத்தில், அப்துல் மாலிக் இப்னு ஹிஷாம் என்பவர் அல் அக்ஸா மஸ்ஜிதை விரிவுபடுத்தி, மேலும் அழகூட்டி, செப்பனிட்டபோதுதான் பள்ளிவாசலின் மேற்குப் பகுதியில், இந்தச் சுரங்கப்பாதையை அமைத்தார் என்று சொல்கிறார்கள்.

கி.பி. 1099-ம் ஆண்டு ஜெருசலேம் நகரைக் கிறிஸ்துவர்கள் கைப்பற்றியபோது பள்ளிவாசலையும் கைப்பற்றி, சுரங்கத்தை அடைத்துவிட்டார்கள். பின்னால் சார்லஸ் வாரன் என்கிற ஒரு பிரிட்டிஷ் அகழ்வாய்வாளர், இந்த மூடிய சுரங்கத்தைக் கண்டுபிடித்ததாகத் தெரிகிறது. (இது நடந்தது கி.பி.1880-ம் ஆண்டு) பயன்பாட்டில் இல்லாத காரணத்தால் மண்மூடிக் கிடந்த இந்தச் சுரங்கம்தான், 81-ம் ஆண்டு யூதர்களின் அகழ்வாய்வின்போது அகப்பட்டது.

செய்தி, மீடியாவுக்குப் போய்விட்டபோது, யூதர்கள் தரப்பில் "இந்தச் சுரங்கப்பாதை சாலமன் ஆலயத்தின் ஒரு பகுதி. ஆலயக் கட்டுமானத்திலேயே சுரங்கமும் இருந்தது" என்று சொல்லப்பட்டது.

ஆனால், சாலமன் தேவாலயம் குறித்த வரலாற்றுத் தகவல்களைத் தரும் எந்த ஒரு ஆவணமும் கோயில் எழுப்பப்பட்டபோது, சுரங்கம் இருந்தது பற்றிய குறிப்பு எதையும் தரவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல், யூதர்களின் அகழ்வாய்வின் விளைவாக, அல் அக்ஸா மஸ்ஜித் இருந்த வளாகம் மிகப்பெரிய அகழி போலானதுதான் மிச்சமே தவிர, தேவாலயம் ஏதும் அங்கு இருந்ததற்கான ஆதாரங்கள் கிடைக்கவில்லை.

இது மிகவும் இயல்பானது. சாலமன் ஆலயம் கட்டப்பட்டு சுமார் இரண்டாயிரம் ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில், நவீன காலத்தில் ஆதாரம் தேடி, இருக்கிற மஸ்ஜிதை இடித்துப் பார்ப்பது என்பது வீண் வேலை. இது யூதர்களுக்குத் தெரியாததில்லை. ஆனால், அந்த ஓர் உடைந்த சுவர் மீது, அவர்களுக்கு உள்ள நம்பிக்கைதான் இக்காரியத்தை எவ்வித மன உறுத்தலும் இல்லாமல் அவர்களைச் செய்யவைத்தது. தவிரவும், அல் அக்ஸா மஸ்ஜிதை முன்வைத்து முஸ்லிம்கள் ஜெருசலேம் நகரைச் சொந்தம் கொண்டாடிவிடக்கூடாது என்கிற எண்ணமும் இதற்கான முக்கியக் காரணங்களுள் ஒன்று.

**இப்படித் தோண்டித்தோண்டி மண் எடுத்ததின் விளைவாக, இன்றைக்கு அல் அக்ஸா பள்ளிவாசலின் அடித்தளம் மிக அபாயகரமான நிலையில் காணக்கிடைக்கிறது. பள்ளிவாசலின் அஸ்திவாரங்கள் வெளியே தெரிகின்றன. மண் வாசனையே இல்லாமல் வெறும் கற்களின் மீது நிற்கிறது கட்டடம். ஒரு சிறு நில நடுக்கம் ஏற்பட்டால் கூட, மஸ்ஜித் இடிந்து விழுந்துவிடும் அபாயம்.** *(இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில் அல் அக்ஸா மஸ்ஜிதை இடிக்க நடக்கும் சதிகள் பற்றி காண்போம்.)* ***நன்றி: பா.ராகவன். குமுதம் ரிப்போர்ட்டர், 11 செப்டம்பர் 2005***

*- முதல் பக்கத் தொடர்ச்சி (அன்றைய...)*

"சாமி"களையும் எங்கள் ஊரில் உள்ளவர்கள் எல்லோரும் காலில் விழுந்து ஆசிர்வாதம் பெற்று வழியனுப்புவது வழக்கம். ஒரு சிலரைத் தவிர பாக்கி நின்றவர்கள் அனைவரின் காலிலும் விழுந்தனர். ஆசிர்வாதமும் பெற்றனர். ஆனால் நான் அங்கு நின்றவர்கள் அனைவரின் காலிலும் சகட்டுமேனிக்கு விழுந்து கும்பிட்டேன்.

ஆனால் இந்த சம்பவம் என் குடும்பத்திலும் மற்றும் எங்கள் ஊர் மேல்ஜாதி பிரமுகர்கள் அனைவரின் மனதிலும் பெரும் வேதனையை ஏற்படுத்தியது. பிறகு என்னை அழைத்து "நீயோ மேல்ஜாதிகாரன், நீ போய் எப்படி கீழ்ஜாதிகாரனின் காலில் விழுவது இது கேவலம்! நம் ஜாதிக்கே பெருத்த அவமானம்!" என்றெல்லாம் ஏசினார்கள். அவர்கள் அப்படி கோபப்பட்டதற்கும் காரணம், எங்கள் ஊரைப் பொருத்தவரை தாழ்ந்த ஜாதிக்காரர்கள் என்பவர்கள் எவ்வளவு தான் உயர் மட்டத்தில் அல்லது பொருளாதார உயர்வில் இருந்தாலும் அவர்களை தாழ்ந்தவர்களாகவும் அடிமைகளாகவுமே கருதுவார்கள்.

**"உங்களைப் போலவே அவரும் பழனி முருகனுக்கென்று மாலை அணிந்து கார்த்திகை மாதம் முழுவதும் விரதம் இருந்து உங்களுடனே கால்நடையாக நடந்தும் வருகின்றார். நீங்களும், அவரும் ஒரே இறைவனை வணங்க ஒரே முறையில் ஒரே நாளில் ஒரே இடத்திற்கே ஒரே நோக்கத்தோடு செல்கின்றீர்கள். இருந்தும் ஏன் அவர்களும் நம்போன்ற மனிதர்களே அல்லது நாம் வணங்க போகின்ற அதே இறைவனைத்தானே அவர்களும் வணங்க வருகின்றார்கள் என்பதை உங்கள் மனம் ஏன் ஏற்க மறுக்கின்றது?"** என்று நான் கேட்டேன். என்னை மேலும் கீழும் பார்த்துவிட்டு ஒன்றும் சொல்லாமல் அனைவரும் யாத்திரை புறப்பட்டு சென்றுவிட்டனர்.

பிறகு பாட்டி என்னை சமாதானம் செய்து என்னை வீட்டிற்கு அழைத்துச் சென்றார். அன்று இரவு முழுதும் எனக்கு தூக்கமேயில்லை என் மனதுக்குள் நான் என்ன தவறு செய்தேன் என்ற ஒரே ஒரு கேள்வி பாக்கியாகவே நின்றது. நீண்ட நாட்களுக்குப் பிறகு நடந்த இந்த சம்பவத்தை என் ஆசிரியரிடம் கூறினேன். அவர் சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு நெல் சலிக்கும் சல்லடையை காண்பித்து இதோ பார் தம்பி இந்துமதம் இந்த சல்லடையைப் போன்று பல ஓட்டைகளைக் கொண்டது அதில் ஒரு ஓட்டையைத்தான் நீ இப்பொழுது பார்த்திருக்கின்றாய் இதுபோல் இன்னும் பல ஓட்டைகள் உள்ளது என்று கூறினார்.

அப்பொழுது என் மனம் சமாதானம் அடைந்தது இன்னும் பல கேள்விகளை கேட்பதற்காக....!!

### *அன்றைய கேள்விக்கு இன்றைய பதில்...*

"மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள், அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான், அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான். பின்னர் இவ்விருவரிலிருந்து, அநேக ஆண்களையும் பெண்களையும் (வெளிப்படுத்தி உலகில்) பரவச் செய்தான். ஆகவே, அல்லாஹ்வுக்கே பயந்து கொள்ளுங்கள்!" (அல்குர்ஆன் 4: 1)

மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண் ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம். நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்வதற்காகவே கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம் ஆகவே உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ அவர்தாம் ஏக இறைவனிடத்தில் நிச்சயமாக மிக்க மேலானவர். (அல்குர்ஆன் 49:13)

உங்கள் அனைவரின் மூலக்கூறும் ஒன்றே. ஒரே ஆண் ஒரே பெண்ணிலிருந்து தான் உங்கள் மனித இனம் முழுவதும் தோன்றியுள்ளது என்கிறது. இந்த இறைவசனம் மனித இனம் ஒரே இனமாக இருந்த போதிலும் நீங்கள் பல கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் பிரிந்து இருப்பது ஓர் இயற்கையான விஷயமாகும். மனித இனம் பெருகப்பெருக எண்ணற்ற குடும்பங்கள் தோன்றுவதும் பின் பல பாகங்களுக்கு அவை குடிபெயரும்போது பல கிளைகளும் பல கோத்திரங்களும் உருவாகுவதும் தவிர்க்க முடியாததாகும். மனிதன் பூமியின் பல பகுதிகளில் வசிக்கத் துவங்கிய பின்னர் உடல் அமைப்பு, நிறம், மொழி, நடை, உடை, பாவனைகள், வாழ்க்கை முறைகள் ஒன்றுக்கொன்று மாறுபட்டே ஆகவேண்டியிருக்கிறது. ஒரே பகுதியில் வசிப்போர் ஒருவருக்கொருவர் நெருங்கியவர்களாகவும் வெகுதொலைவில் வசிப்போர் நெருக்க மற்றவர்களாகவும் இருக்க வேண்டிய நிலை வந்தது.

ஆனால் இந்த இயல்பான வேற்றுமை நம்மிடம் இருப்பதால் இவ்வேற்றுமையின் அடிப்படையில் உயர்ந்தவன், தாழ்ந்தவன், ஆண்டான், அடிமை, மேலோன், கீழோன் எனும் பாகுபாடுகள் தோற்றுவிக்கப்பட வேண்டும் என்பது அறிவீனர்களின் கருத்தாகும்

இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் நிகழ்த்திய சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இறுதி உரையில் கூறினார்கள்:

மானிடரே! நிச்சயமாக உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்து தான் இறைவன் படைத்தான் மனித சமுதாயம் அனைத்தும் ஆதமுடைய சந்ததிகளே! ஆதமோ மண்ணிலிருந்து படைக்கப்பட்டவர் எனவே பிறப்பு, சொத்து ஆகியவற்றால் எவரும் உயர்ந்தவரோ தாழ்ந்தவரோ அல்லர். ஓர் அரபி, அரபி அல்லாத ஒருவனை விட உயர்ந்தவன் அல்லன். அரபி அல்லாத ஒருவன் ஓர் அரபியை விட உயர்ந்தவன் அல்லன்.

"ஒரு வெள்ளையன் ஒரு கருப்பனை விட உயர்ந்தவன் அல்ல, ஒரு கருப்பன் ஒரு வெள்ளையனை விட உயர்ந்தவன் அல்ல. மனிதர்களுக்குள்ள உயர்வெல்லாம் அவனின் இறைபக்தியைப் பொறுத்தே அமைந்திருக்கிறது"

மக்காவை வெற்றி கொண்டபோது நபி(ஸல்) ஆற்றிய சொற்பொழிவில் கூறுகிறார்கள்:

உங்களிடமிருந்து அறியாமைக் காலத்தின் குறைகளையும் அதன் வீண் பெருமைகளையும் போக்கிவிட்ட இறைவனைத் துதித்து நன்றி செலுத்துகிறேன்.

மக்களே! எல்லா மனிதர்களும் இரண்டே பிரிவினராக பிரிகின்றார்கள். ஒருவர் நல்லவர் அதாவது இறையச்சம் உள்ளவர். அவரே இறைவனின் பார்வையில் கண்ணியம் மிக்கவர். மற்றொருவர் தீயவர் துர்பாக்கியவான். அவன் அல்லாஹ்வின் பார்வையில் இழிவுக்குரியவன். மனிதர் அனைவரும் ஆதமின் மக்களே ஆவர். அல்லாஹ் ஆதம்(அலை) அவர்களை மண்ணிலிருந்து படைத்தான். (நூல்: பைஹகீ, திர்மிதி)

திருக்குர்ஆனின் பிரகடனமும் திருத்தூதரின் போதனையும் வெறும் தத்துவங்களாக இருந்துவிட்டு மாய்ந்து போகவில்லை. அன்றைய அரபு சமுதாயத்தில் தலைவிரித்தாடிய குலபேதம், நிறபேதம், வர்க்க பேதம் முதலான பீடைகளை அடியோடு கிள்ளியெறிந்து தீயபண்புகளை விட்டு மிகவும் தூய்மையான பண்பட்ட ஒரே

சமுதாயத்தை இம்மண்ணுலகில் உருவாக்கிக் காட்டியது இஸ்லாம்.

ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்னும் சான்றோர்களின் வாக்கை மெய்ப்படுத்தி அதை நடைமுறைப்படுத்தியது இஸ்லாம். ஏகத்துவத்தின் வருகையானது, நாடு தழுவியதொரு புரட்சியாகவும் அதன்பின் உலகப்புரட்சியாகவும் மாறியது.

ஏகதெய்வ நம்பிக்கை அந்த நாட்டில் நிலவிய சட்டத்தை மட்டுமோ அல்லது அங்கிருந்த ஒரு சில தலைவர்களை மட்டுமோ மாற்றிடவில்லை தனி மனிதர்களை அது தனித்தனியாகவும் சமுதாயத்தை ஒட்டு மொத்தமாகவும் மாற்றியமைத்தது.

அன்று எனக்கு மூடநம்பிக்கையின் வாசலில் நின்று எழுந்த அந்த கேள்விக்கு இஸ்லாத்தில் என்றோ உள்ள பதிலை அறியக்கூடிய பாக்கியத்தை அல்லாஹ் இன்று தந்துள்ளான். அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமின். புகழ் அனைத்தும் இறைவன் ஒருவனுக்கே! வல்ல ரஹ்மான் நாம் நாடிய காரியங்களை நல்வழியில் நடத்துவானாக.

---

# எய்ட்ஸ் நோயைப் பற்றி என்ன தெரிந்து வைத்திருக்கின்றீர்கள்?

☛ எய்ட்ஸ் நோய் மிக ஆபத்தான தொற்று நோய்களில் ஒன்றாகும், குறிப்பிட்ட ஒரு கிருமியே இதற்குக் காரணம். எய்ட்ஸுக்குரிய கிருமி(HIV+) மனிதனின் வெள்ளணுக்களை தாக்குகின்றது. இதனால் சகல நோய்க் கிருமிகளை எதிர்க்கக்கூடிய இயற்கையான நோய் எதிர்ப்புச் சக்திகளை உடல் இழந்து விடுகின்றது.

☛ சிலருக்கு இந்த எய்ட்ஸ் நோய் கிருமிகள் இருக்கின்றன. நீண்ட காலம் அந்த நோயின் அடையாளம் அந்த மனிதருக்குத் தென்படாமல் இருக்கும். அதன் காரணமாக இந்த நோய் மற்றவர்களுக்கு பரவக்காரணமாகும்.

### எய்ட்ஸ் கிருமிகள் மற்றவர்களுக்கு பரவும் வழிகள்

☛எய்ட்ஸ் உள்ள ஒருவருடன் உடலுறவு கொள்வதால் - எய்ட்ஸ் நோயின் அடையாளங்கள் அவர்மீது வெளிப்படையாக தெரியாவிட்டாலும் சரியே (இதன் மூலம்தான் 100% - க்கு 90% பரவுகின்றது)

☛கர்ப்பநேரத்தில் அல்லது பிள்ளைப்பேறின் போது அல்லது பால்கொடுக்கும் போதுகூட தாயிடம் உள்ள எய்ட்ஸ் நோய் குழந்தையை தொற்றிக் கொள்ளும்.

☛ எய்ட்ஸ் நோயுள்ளவரின் இரத்தம் அல்லது அவரது உடலிலுள்ள ஒன்றை அதை பரிசீலிக்காமல் உடல் ஆரோக்கியமுள்ளவருக்கு பயன்படுத்தும் போது.

☛எய்ட்ஸ் நோயுள்ளவரின் உறுப்புக்களை (இருதயம், கிட்னி போன்றவற்றை) பரிசீலிக்காமல் உடல் ஆரோக்கியமுள்ளவருக்கு பயன்படுத்தும்போது.

☛ போதைப் பொருட்களை உட்செலுத்துவதற்காக பயன்படுத்திய ஊசி, முடி இறக்கும் கருவி, பல் துலக்கும் கருவி, சரியான முறையில் சுத்தம் செய்யப்படாத பல் வைத்தியரின் கருவிகள் அல்லது காது குத்தும் கருவிகள், முகத்தை அழகுபடுத்தும் கருவிகள், இரத்தம் குத்தி எடுக்கும் கருவி, சரியான முறையில் சுத்தம் செய்யப்படாத சீன ஊசிகள் மற்றும் எய்ட்ஸ் நோயுள்ளவரின் இரத்தம்பட்ட பொருட்களை உபயோகிப்பது. (கடைசியாக சொல்லப்பட்ட நான்கு வகைகளில் எய்ட்ஸ் நோய் பரவுவது 100% - ல் 10% தான்)

### கீழ்கண்ட காரணங்களால் எய்ட்ஸ் நோய் பரவுவதில்லை

☛ வேலை செய்யும் இடத்திலோ அல்லது படிக்கும்போது அல்லது எய்ட்ஸ் நோயுள்ளவருக்கு பணிவிடை செய்வதின் மூலம் எய்ட்ஸ் நோய் பரவுவதில்லை.

☛ பாதிக்கப்பட்ட நபருடன் பிரயாணம் செய்வதாலோ அல்லது அவர் பொதுவாக பயன்படுத்தும் பொருட்களை உபயோகிப்பதாலோ பரவாது.

☛ நீச்சல்குளம், கழிவறைகள் மற்றும் குளிப்பறைகளை உபயோகிப்பதன் மூலம் பரவாது.

☛ எய்ட்ஸ் நோயுள்ளவருடன் சாப்பிடுவது, குடிப்பது அவர் இருக்கும் மருத்துவமனைக்கு சென்று சந்திப்பது அல்லது தேவைப்படும்போது அவருடன் சேர்ந்திருப்பதால் பரவாது.

☛ தும்மல் மற்றும் இருமலினால் எய்ட்ஸ் பரவுவதில்லை

☛ மிருகங்கள் அல்லது விஷஜந்துக்கள் அவரைத் தீண்டுவதால் (இவைகள் மூலம் எய்ட்ஸ் நோய் பரவுவதில்லை)

### எய்ட்ஸ் கிருமிக்கு மருந்தில்லை, அந்த நோயிலிருந்து தப்பித்துக்கொள்ளும்முறை பின்வருமாறு

☛ இந்த நோய் ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் வரும்போதே கெட்ட நண்பர்களிடமிருந்து முழுவதுமாக தவிர்ந்து கொள்ள வேண்டும் அவர்களின் முடிஇறக்கும் கருவிகள், பல்துலக்கும் கருவிகள், ஊசி போன்றவைகளை உபயோகிக்கக் கூடாது.

☛ இஸ்லாத்தில் தடுக்கப்பட்ட அனைத்து பாலியல் முறையிலிருந்தும் தூரமாக வேண்டும்.

சுருக்கமாக: அல்லாஹுவை பயந்து கொள்ளுங்கள்! கண்ணியத்திற்குரிய அல்லாஹுவின் கூற்றை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்.

**வெளிப்படையான, இரகசியமான, மானக்கேடான காரியங்களை நீங்கள் நெருங்காதீர்கள்**

***(அல்குர்ஆன் 6: 151)***

**நீங்கள் விபச்சாரத்தை நெருங்காதீர்கள் நிச்சயமாக அது மானக்கேடானதாகும் மேலும் (வேறு கேடுகளின் பக்கம் இழுத்துக் செல்லும்) தீய வழியாகவும் இருக்கின்றது**

***(அல் – குர்ஆன் 17: 32)***

**சவூதி அரேபியா அரசாங்க சுகாதார அமைச்சு**
**(ஜித்தா பிராந்திய சுகாதார அமைச்சின் தலைமையகம்)**
**எய்ட்ஸ் நோய் தடுப்பு உள்நாட்டமைப்பு**
**தொலைபேசி : 02-648 7140**
**தொலைநகல்: 02-648 1821**

# யானை(Elephant)

E. உஸ்மான் அலி

-அறிவியல் தொடர்-

யானையின் தோல் இரண்டிலிருந்து நான்கு செ.மீ வரை தடிமன் கொண்டதாகும். இவ்வளவு தடிமனாக இருப்பினும் கூட இவைகளின் தோல் அதிக உணரும் திறன் கொண்டதாகும். இவற்றின் தோலில் மிகக் குறைந்த அளவே வியர்வைச் சுரப்பிகள் இருப்பதனால் இவை தங்கள் உடலின் மேற்புறத்தில் குளம் மற்றும் குட்டைகளில் புரண்டு உடலில் சேற்றை பூசிக்கொள்கின்றன. அல்லது தங்கள் தலையிலே தாங்களே மண்ணைப் அள்ளிப் போட்டுக் கொள்கின்றன. இதன் மூலம் சூரிய வெப்பத்திலிருந்து தங்களைக் காத்துக் கொள்ளுகின்றன. மேலும் உடலின் மிக முக்கிய இரத்த நாளங்கள் அனைத்தும் அதன் இரு அகன்ற காது மடல்களை கடந்து செல்லுவதால் அதனை அசைப்பதன் மூலம் இரத்தத்தை குளிரச் செய்து உடலின் வெப்பத்தை பெருமளவிற்கு வெளியேற்றுகின்றன. இதுவே இவை தங்கள் காதுகளை அதிகமாக அசைத்துக் கொண்டிருப்பதன் காரணமாகும்.

அடுத்து யானையின் புத்திக் கூர்மையைப் பற்றிப் பார்ப்போம். புத்திக் கூர்மையை அளவிட்டு கணக்கிடுவதில் திட்டவட்டமான வரையறையை அறிவியலாளர்கள் இதுவரை அடையாததால் இவற்றின் புத்திக் கூர்மையை அளவிடும் விஷயத்திலும் திட்டவட்டமான முடிவுக்கு இதுவரை வர முடியவில்லை. இருப்பினும் இவை புத்திசாலி விலங்கினம் என்பதற்கு நிறைய சான்றுகள் உள்ளன. மனிதர்களின் மூளையைக் காட்டிலும் மிகப் பெரிய மூளை யானையுடையதாகும். மூளையின் அளவிற்கும் அறிவுத்திறனுக்கும் தொடர்பு இருப்பதாக விஞ்ஞானிகளினால் கருதப்படுகின்றது. அதிகப்படியாக இவற்றின் மூளையில் காணப்படும் செரிப்ரல் கார்டக்ஸ் என்னும் இரசாயணப் பொருள் அறிவுத்திறனை அளவிடும் பொருளாக கணித்திருக்கின்றார்கள். மேலும் இவற்றின் புத்திக் கூர்மையான செயல் பாடுகளினாலும் இதன் புரிந்து கொள்ளும் திறனின் அடிப்படையினால்தான் சர்க்கஸ் போன்ற கேளிக்கைகளில் இவற்றைக் கொண்டு வியக்கத்தக்க செயல்பாடுகளை செய்ய இயலுகின்றது. மற்றுமொரு முக்கிய அம்சம் இவற்றின் தொலைத்தொடர்பு கொள்ளும் முறையாகும். இவைகள் தங்கள் தும்பிக்கையைக் கொண்டு ஒன்றை ஒன்று தொடுவதன் மூலமும் சத்தத்தை வெளிப்படுத்துவதன் மூலமும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொள்கின்கின்றன. 1980-ம் ஆண்டுதான் முதன் முதலாக யானையின் தும்பிக்கையினால் மனிதர்களின் செவிப்புலனினால் கேட்க முடியாத குறைந்த அலை வரிசையைக் கொண்ட சப்தத்தை எழுப்புவதைக் கண்டறிந்தார்கள். இதைக் கொண்டு தொலைத்தொடர்பு கொள்வதாகவும் அறியப்பட்டுள்ளது.



யானைகள் காட்டின் சுற்றுப் புற சூழலில் குறிப்பிடத்தக்க பங்கினை வகிக்கின்றன. அதிகமான அளவிற்கு மரங்களிலிருந்து இலைத் தழைகளை பறித்து உண்பதனால் சூரிய வெளிச்சம் கீழே ஊடுருவிச் சென்று பூமியை அடைய வகை ஏற்பட்டு சிறிய புற்பூண்டு வகைகள் வளர உதவி புரிகின்றன. மிக வெப்பமான காலங்களில் இவற்றால் தோண்டப்படும் தண்ணீர் பள்ளங்கள் மற்ற வனவாழ் விலங்கினங்கள் குடிப்பதற்கும் பயன்படுத்திக் கொள்கின்றன. மேலும் அடர்த்தியான காடுகளில் இவற்றின் குழுக்கள் பயணம் செய்வதனால் ஏற்படும் வழித் தடத்தினை சிறிய விலங்கினங்கள் உட்பட மனிதர்களும் பயன்படுத்திக் கொள்ள ஏதுவாயிருக்கின்றது. பூமியில் வளரும் புற்பூண்டுகளை அடியோடு பிடுங்கி உண்பதனால் பூமியில் காற்றோட்டம் அதிகரித்து மீண்டும் புதிய புற்பூண்டுகள் வளர வகை ஏற்படுகின்றன.

யானைகள் சராசரியாக 60 வருடம் வாழக்கூடியது. பூமியில் வாழும் உயிரினங்களிலேயே அதிக கர்ப்ப காலம் யானையுடையதாகும். 20 முதல் 22 மாத கர்ப்ப காலத்தில் ஒருக் குட்டியை ஈன்றெடுக்கின்றன. 4 ஆண்டு இடைவெளியில் தனது 60 ஆண்டுகள் வரை குட்டிகளை போடும் தன்மையைப் பெற்றுள்ளன. குட்டிப் பிறக்கும் போது 120 கிலோ எடையும் ஒரு மீட்டர் உயரமும் உடையதாக இருக்கும். பிறந்த ஓரிரு மணி நேரத்தில் எழுந்து தன் தாயின் முன் கால்களுக்கு இடையே அமைந்த பால் சுரப்பிகளில் பால் குடிக்க ஆரம்பிக்கின்றது. யானையின் பால் சுரப்பி இரண்டு காம்புகளை உடையதாகும்.

தங்கள் உணவிற்காக நீண்ட தூரம் பயணிக்கும் தரைவாழ் உயிரினம் யானை ஆகும்.

தரையில் வாழக்கூடிய விலங்கினங்களில் மிகப் பெரியதும் நன்கு வளர்ந்த ஒரு யானைக்கு இயற்கையில் மனிதனைத் தவிர வேறு எதிரி இல்லை என்று சொல்லுமளவிற்கு பலம் வாய்ந்ததும். 60 வருட கால நீண்ட வாழ்நாளைக் கொண்டதும், நல்ல புத்திக் கூர்மையும் உடைய இந்த பிரம்மாண்டமான உயிரினம் ஒரு தாவர உண்ணியாகும். இந்த உயிரினம் மூன்றில் ஒரு பங்கு நேரத்தை உண்டு களிப்பதிலேயே செலவழிக்கின்றன. 80 வகையான வித்தியாசமான தாவரங்களிலிருந்து இலை, பட்டை, வேர்கள், கிழங்கு வகைகள், காய், கனி, மொட்டு, போன்றவற்றை தங்களின் உணவாக உட்கொள்கின்றன. நன்கு வளர்ந்த ஒரு யானை ஒரு நாளைக்கு 100 முதல் 300-கிலோ வரை உணவை உட்கொள்கின்றன. எனவே இவைகளுக்கு குடிக்கத் தண்ணீரும் அதிகம் தேவைப்படுகின்றது. ஒரு நானைக்கு 200-லிட்டர் தண்ணீர் வரை குடிக்கின்றன.

யானைகள் குழுக்களாக இணைந்து வாழக்கூடியன. ஒரு பகுதியில் காணப்படும் தண்ணீர் மற்றும் தாவரங்களை விரைவில் உண்டு கபளீகரம் செய்வதினால் விரைவில் இடம் மாறிச் செல்லக் கூடிய நிலை இவைகளுக்கு ஏற்படுகின்றன. இவற்றின் ஒரு குழு தங்கள் உணவை பெற ஒரு பருவத்தில் 1000 சதுர கிலோ மீட்டர்களைப் பயன்படுத்திக் கொள்கின்றன. ஒரு வருடத்தில் இவை தங்கள் உணவிற்காக 5,000 முதல் 10,000 கிலோ மீட்டர் வரை பயணிக்கின்றன. இது தரையில் வாழும் மற்ற பாலூட்டிகள் செல்லும் தொலைவைக் காட்டிலும் கூடுதலாகும்.

யானைகள் புதியதாக பிறந்த குட்டிகளுக்காக மகிழ்ச்சி அடைகின்றன. மேலும் இறந்த தங்கள் குழுவை சேர்ந்த யானைகளுக்காக கண்ணீர் விட்டு அழுகின்றன.

யானையின் உணர்ச்சி மயமான வாழ்க்கையைப் பற்றி எழுத சில பக்கங்கள் அவசியமாகும். யானைகள் குழுக்களாக இணைந்து வாழக்கூடியது என்று முன்பு கண்டோம். இவற்றில் உறவு முறைகளுடன் அமைந்த 2 முதல் 29 வயது வரை பலதரப்பட்ட வயதுடைய யானைகள் வரை இருக்கும். இவை இறுதி வரை கட்டுக் கோப்புடன் வாழ்கின்றன. எண்ணிக்கை அதிகமாகி விட்டாலோ அதிலிருந்து சில பிரிந்து சென்றுப் புதிய குழுக்களை அமைத்துக் கொள்கின்றன. ஒரு குழுவைச் சேர்ந்த யானைகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புகொள்ளும் விதமாக 50 மீட்டர் இடைவெளியிலேயே தங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளுகின்றன. ஒரு குழுவிற்கு அந்தக் குழுவில் வயது முதிர்ந்த பெண் யானை வழிகாட்டியாகவும் தலைவியாகவும் செயல்படுகின்றது. அது இறந்த பின்னர் அடுத்த வயதில் முதிர்ந்த பெண் யானை தலைமையை அடைகின்றது.

ஆராய்சியாளர்கள் சமீப காலங்களில் யானையின் நடவடிக்கைகளை ஆராய்ந்து சில அதிசயமான விஷயங்களைக் கண்டறிந்தனர். யானைகள் புதிதாக பிறந்த குட்டிகளுக்காக தங்கள் சந்தோசத்தையும், இறந்த தங்கள் குடும்பத்தை சேர்ந்தவற்றிற்காக கண்ணீர் விட்டு அழுவதையும் கண்டறிந்துள்ளனர். மேலும் சில நாட்களோ அல்லது சில மணி நேரங்களே பிரிந்து திரும்பிய தங்கள் கூட்டத்தைச் சேர்ந்த யானையின் வருகைக்காக விரிவான முறையிலே வரவேற்பை அளிக்கின்றன. வரவேற்கும் விதமாக வித்தியாசமான சத்தத்துடனும் ஒன்றை ஒன்று உரசியும், தலையோடு தலையை இடித்தும், முன் பின்னுமாக நடந்தும் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்துகின்றன.

**பூமியில் வாழும் உயிரினங்களிலேயே அதிக கர்ப்ப காலம் யானையுடையதாகும். 20 முதல் 22 மாத கர்ப்ப காலத்தில் ஒருக் குட்டியை ஈன்றெடுக்கின்றன. 4 ஆண்டு இடைவெளியில் தனது 60 ஆண்டுகள் வரை குட்டிகளை போடும் தன்மையைப் பெற்றுள்ளன.**

யானைகளை ஏறக்குறைய 4000 ஆண்டுகளாக மனிதன் தன் உபயோகத்திற்கு பயன்படுத்தி வருகின்றான். ஆசியாவில் 13 முதல் 16 ஆயிரம் யானைகள் வரை தொழிலில் பயன்படுத்துகின்றார்கள். இந்த எண்ணிக்கை உலக யானை எண்ணிக்கையில் 25 சதவிகிதமாகும். இரண்டாம் உலகப் போரின் போது பளுவான இராணுவத் தடவாளங்களைத் தூக்கிச் செல்லப் யானையைப் பயன்படுத்தியுள்ளதையும் அறிய முடிகின்றது. இவை வனப்பகுதியிலிருந்து பெரிய மரத் துண்டுகளை வெளியில் எடுத்து வரவும், பயணிகளை ஏற்றிச் செல்லவும், பாரத்தை சுமந்து செல்லவும், மர அறுப்பு பட்டறைகளிலும் பலவாறாக பயன்படுத்தப்படுகின்றன. யானை 14-ஆம் வயதில் முதன் முதலில் தொழில் பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டு 25 வயதை அடைந்தவுடன் பளுவான மரக்கட்டைகளை சுமந்து கொண்டு வரவும் பயன்படுத்தப்படுகின்றன. இவை பெற்றுள்ள புத்திக் கூர்மையின் காரணமாக இவை விரைவில் தொழில் நுட்பத்தை கற்றுக்கொள்கின்றன.

25-ஆம் வயதில் இவற்றைக் கொண்டு தொழிலில் பயன்படுத்தி பொருளாதாரத்தை ஈட்டும் யானையின் மேய்ப்பாளனாகிய பாகன் தன் வாழ்நாள் முழுதும் அதனுடனே கழிக்கின்றான். யானையின் வயது ஏற ஏற பாகனுடைய வயதும் ஏறிக் கொண்டு செல்வதனால் தனது 50 வது வயதில் ஓய்வு பெறும் வயதை அடையும் போது யானையும் தன் வலுவை இழந்து ஓய்வு பெறும் நிலையை எட்டிவிடுகின்றது. இந்நிலையில் இவ்விருவருக்குமிடையே ஏற்படும் அன்யோன்யமான உறவு பிரிக்க முடியாத வார்த்தைகளினால் விளக்க இயலாத ஒரு உறவாக மாறிவிடுகின்றது. இருவருக்குள் ஆழமான அன்பு ஏற்பட்டு விடுகின்றது. பாகனின் சொல்லுக்கு யானை உடன் கட்டுப்பட்டு நடப்பதையும் மற்றவர்களின் கூப்பாட்டை ஒரு பொருட்டாகவே கருதாமல் இருப்பதையும் கொண்டு நாம் இதை விளங்கிக்கொள்ள முடியும்.

1900 ம் ஆண்டின் கணக்கெடுப்பின் போது 10 மில்லியன் வரை இருந்த யானையின் எண்ணிக்கை 1979ம் ஆண்டு எடுத்த கணக்கெடுப்பின் போது 1.3 மில்லியன் எண்ணிக்கை மாத்திரமே இருந்ததாக கணக்கிட்டு உள்ளார்கள். மிக மிக வேகமாக குறைந்து வரும் இந்த சதவிகிதத்தினால் விரைவில் இந்த இனம் முற்றிலும் அழிந்து விடுமோ என்று அஞ்சப்படுகின்றது. பல நாடுகளில் மிருக காட்சி சாலைகளில் மாத்திரமே யானையை காணக் கூடிய நிலை இருக்கின்றது. இதைக் காக்கும் விதமாக இதன் அழிவிற்கு முக்கிய காரணமாக விளங்கி வரும் யானைத் தந்தத்தினால் செய்யப்படும் பொருட்களை முற்றிலுமாக இறக்குமதி செய்யவும் விற்கவும் தடை செய்து 120 நாடுகள் சட்டமேற்றியுள்ளன. இதன் மூலம் ஓரளவிற்கு சட்ட விரோதமாக வேட்டையாடப்படும் எண்ணிக்கை குறைந்திருப்பினும் கூட அழிவுனுடைய எல்லையில் இந்த இனம் இருப்பதை மறுக்க இயலாது. இயற்கையான வன சூழ்நிலையில் இவைகளின் இனப்பெருக்கத்தினால் ஏற்படும் எண்ணிக்கை பெருக்கம் அவற்றை தொழிலில் ஈடுபடுத்தும் போது சாத்தியக் கூறுகள் குறைவாகவே இருக்கின்றது. நாம் முன் கண்டவாறு யானைகள் ஒரு குழுக்களாக இணைந்து கட்டுப்பாட்டுடன் ஒரு தலைமையின் கீழ் வாழ்ந்து வருவதனால் சில சமயங்களில் சட்ட விரோதமாக வேட்டையாடக் கூடியவர்களின் இலக்கிற்கு தலைமையை வகிக்கும் யானை பலியாகிவிடுவதனால் அந்த கூட்டத்திற்கு சரியான வழிக்காட்டுதலும் பாதுகாப்பும் இல்லாமல் சிறியத் தலைமுறை யானைகள் கூட்டு சிதைந்து விரைவில் பலியாகும் அபாயமும் நிகழுகின்றது. இதே நிலையில் சென்றால் இன்னும் ஓரிரண்டு தலைமுறைகளுக்கு பின்னர் இந்த உயிரினம் அறவே இல்லாத நிலையை எட்டி யானைப் படங்களை மட்டும் பிள்ளைகளுக்குக் காட்டக் கூடிய நிலை ஏற்பட்டால் வியப்பிற்கு இல்லை.

எல்லா உயிரினங்களையும் மனிதர்களின் பயன்பாட்டிற்கு படைத்ததாக சொல்லும் இறைவனின் இத்தகைய அற்புதமான படைப்பினங்களை மனிதன் சட்ட விரோதமாக தன் சுயநலத்திற்காக வேட்டையாடி வருவதனால் இந்த தவிர்க்க இயலாத நிலை எட்டிவிடுகின்றது.

**வானங்களில் மற்றும் பூமியில் உள்ளவை அனைத்தையும் அவன் உங்களுக்கு பயன்படச் செய்தான். இதில் சிந்திக்கக் கூடிய மக்களுக்கு நிறைய சான்றுகள் உள்ளன. (அல்குர்ஆன் 45:13)**

● ● ●

# குறுக்கெழுத்துப் போட்டி - 2:2

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | ■ | ■ | 3 |
| 4 | ■ | 5 | | | | ■ | |
| | | | | | | | 6 |
| | | | | | 7 | ■ | |
| 8 | | | | | | 9 | |
| | | | ■ | ■ | | | |
| | | 10 | 11 | | | | |
| | 12 | | | | 13 | 14 | ■ |

**இடமிருந்து வலம்**

1. நபி (ஸல்) அவர்களின் கன்னி மனைவி (3)
2. ஐக்கிய அரபு அமீரக நாடுகளில் ஒன்று (3)
5. ஆங்கில மாதத்தின் பெயர் (4)
11. “யத்ரிப்” இந்நகரத்தின் மறுபெயர் (3)

**வலமிருந்து இடம்**

6.உயிரைக் கைப்பற்ற அல்லாஹ்வால் நியமிக்கப்பட்ட வானவர்கள் (7)
7. ஈராக்கின் தலைநகர் (4)
9. நபி (ஸல்) அவர்களின் இரு மகள்களை மணந்த நபித் தோழர் (4)
13. தமிழ் மாதங்களில் ஒன்று (4)

**மேலிருந்து கீழ்**

1. மதீனா யூதர்கள் நோற்ற முஹர்ரம் மாத நோன்பு (3)
3. புத்த மதத்தை நிறுவியவர் (7)
4. குறைஷியர்கள் பரிசைப் பெற ஹிஜ்ரத்தின் போது நபி(ஸல்) அவர்களை விரட்டிச் சென்றவர் (4)
8.காஷ்மீரின் ஒரு பகுதியை அண்டை நாடு கையகப்படுத்தியதால் நிகழ்ந்த போர் (4)

**கீழிலிருந்து மேல்**

10. உஹது ஷஹீது – நபி(ஸல்) அவர்களின் உறவினர் (3)
12. அதிக ஹதீஸ்களை அறிவித்த நபித்தோழர் (5)
13. பட்டுச் சேலைக்கு பெயர் போன ஊர் (4)
14. தமிழக கர்நாடக அரசுகளின் பிரச்சனைக்குரிய நதி (3)

## விதிமுறைகள்

**1.** விடைகளை தனித்தாளில் எழுதி உறையிலிட்டு ஸனாய்யியா இஸ்லாமிய அழைப்பகத்தில்(புதியது) நேரடியாகக் கொடுத்துவிடலாம். தபால் மூலம் அனுப்புவோர் Mr.Ibrahim(Madani), Tamil Division, P.O.Box-32628, Jeddah-21438 அல்லது suvanam@gmail.com என்கிற முகவரிக்கு **துல்க.்.தா** மாதம் 30ம் தேதிக்குள் கிடைக்குமாறு அனுப்பவேண்டும்.

**2.** விடைகளை தனித்தாளில் தெளிவாக கேள்வி எண் மற்றும் இடமிருந்து வலம், வலமிருந்து இடம், மேலிருந்து கீழ் மற்றும் கீழிலிருந்து மேல் ஆகியவைகளை குறிப்பிட்டு எழுத வேண்டும்.

**3.** நீங்கள் அனுப்பும் உறையில் உங்கள் பெயர் மற்றும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி எண்ணை மறவாமல் குறிப்பிடவும்.

**4.** ஒன்றுக்கு மேற்பட்டோர் சரியான விடைகளை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் பரிசு வழங்கப்படும்.

**5.** பரிசு பெற்றவர்கள் விபரம் மற்றும் விடைகள் ஒரு மாதம் விட்டு அடுத்த மாத இதழில் வெளிவரும்.

**6.** ஆசிரியர் முடிவே இறுதியானது.

## குறுக்கெழுத்துப் போட்டி – 10 க்கான பரிசு பெறுபவர் விபரம்

**குறுக்கெழுத்துப் போட்டி - 10 க்கான சரியான பதில்களை பலரும் எழுதியிருந்தனர். குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். பரிசு பெறுபவர்**

**உபைதுல்**

**குறுக்கெழுத்துப் போட்டியில் ஆர்வத்தோடு கலந்து கொண்டு சிறப்பித்த அனைத்து வாசகர்களுக்கும் நன்றி.**

**அன்றியும், உங்களுக்கிடையில் ஒருவர் மற்றவரின் பொருளைத் தவறான முறையில் சாப்பிடாதீர்கள் மேலும், நீங்கள் அறிந்து கொண்டே பிற மக்களின் பொருள்களிலிருந்து(எந்த) ஒரு பகுதியையும், அநியாயமாகத் தின்பதற்காக அதிகாரிகளிடம் (இலஞ்சம் கொடுக்க) நெருங்காதீர்கள்.**

**(அல்-குர்ஆன் 2:188)**

## குறுக்கெழுத்துப் போட்டி – 10 க்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ம் | ஹீ | றா | ப் | 1 இ | ■ | ■ | 2 பை |
| கீ | ■ | பு | ல் | ன் | ன் | ■ | த் |
| த | ■ | ண் | வா | ஜீ | ரா | 3 ம | து |
| ஸ் | 4 தோ | 5 வெ | வ் | ல் | ம் | ■ | ல் |
| மு | ல் | ■ | 6 ஷ | 7 ப | 8 இ | ஷா | மா |
| ல் | வி | ன | 9 வா | ல | ■ | ■ | ல் |
| து | லி | 10 அ | 11 க | த் | த | ம் | ■ |
| 12 ரா | 13 ஷீ | ஜ | ப் | ஜ் | ரா | ஹ் | 14 மி |